Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 24 ஆம் நாள் ஜ. ஆகிர் 30 (9-12-61) சனிக்கிழமை இதழ் 256

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்

# ககாரினுக்கு தமிழில்

## வரவேற்புப் பத்திரம்

### விமான நிலையத்தில் எதிர்வீரசிங்கம் வரவேற்பார்

### திறந்த காரில் பவனி



பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேஜர்ககாரினுக்கு தமதுஉத்தியோக வாசஸ்தலமான அலரி 'மாளிகையில்' விருந்துபசாரமளித்தபோது எடுத்த படம். மேஜர் ககாரினும், அவரது மனைவியும் திருமதி பண்டாரநாயகாவுடனும் அவரது புதல்வி,புதல்விகளுடனும் காணப்படுகின்றனர். இடமிருந்து வலம் சுனித்திரா, திருமதி ககாரின், மேஜர் ககாரின், ஸ்ரீமதி பண்டாரநாயகா, அனுரா, சந்திரிகா

யாழ்ப்பாணம், சனி

உலக சாதனையொன்றை நிலைநாட்டிய முதலாவது வானவெளிப் பிரயாணியான மேஜர் யூரி ககாரின் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும்போது மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இந்தவரவேற்புகளில் கலந்து கொள்வதற்காக பொதுமக்கள் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பிரதான சந்திகளும் அலங்கரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பலாலிவீதி முழுவதையுமே விழாக்கோலம் பூண்டிருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தச்சந்திகளில் மேஜர் ககாரினும் கோஷ்டியினரும் பொது மக்கள் வசதிக்காக சிறிது தாமதமாகச் செல்வார்கள்.

விமான நிலையத்தில் வந்திறங்கும் மேஜர் ககாரின் பலாலி வீதிவழியாக யாழ்ப்பாணம் நகரமண்டபத்தை அடைந்து திரும்பவும் பலாலி வீதி வழியே விமான நிலையத்தை அடைவார்.

#### விமான நிலையத்தில் வரவேற்பு

நாளைக் காலை 11 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கும் மேஜர் ககாரினை ஒலிம்பிக் வீரரான திரு. என். எதிர்வீரசிங்கம் மலர்மாலை சூட்டி வரவேற்பார். மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பிரிவு விளையாட்டு வீரரமணியுமான செல்வி ஆர். இராசகுலதேவி திருமதி ககாரினுக்கு மலர் செண்டு அளித்து வர

(5-ம் பக்கம் பார்க்க)

## 'கடாங்கா சரணடையும்வரை சண்டை நிற்காது'

— ஐ. நா.

### இந்திய ராணுவம் படுகொலை புரிவதாய் ஷோம்பே ஓலம்

எலிஸபெத்வில்லி, டிச. 8

கடாங்கா ராணுவம் சரணடையும்வரை ஐ. நா. துருப்புக்கள் சண்டையை நிறுத்தப்போவதில்லையென ஐ. நா. அதிகாரி ஒருவர் அறிவித்தார். இதே சமயம் இந்தியப் போர் விமானங்கள் கடாங்கா வெடிமருந்துக் கிடங்குகள்மீது குண்டுமாரி பொழிந்தவண்ணமிருந்தன.

இன்று நான்காவது தினகள் கடாங்கா வாசிகளைப் படுமாகவும் ஐ. நா.—கடாங்காத் துருப்புக்களிடையே சண்டை நடைபெற்றது. எலிஸபெத்வில்லி திரும்பியுள்ள திரு. ஷோம்பே, கடாங்கா துருப்புக்களின் தலைமைப் பதவியை தாமே ஏற்று, நேரடியாகச் சண்டை நடத்தினர்.

ஐ. நா. இந்திய கூர்க்காக் கொலை செய்துவருவதாய்க குற்றஞ்சாட்டிய அவர் கடைசி ஐ. நா. வீரன் உயிரோடிருக்கும்வரை சண்டை நடத்துமாறு தம் துருப்புக்களுக்கு உத்தரவிட்டார்.

ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு. யுதாண்ட், இன்று ஐ. நா. பிரதம பிரதிநிதிகளுக்குத் தம் காங்கோ நடவடிக்கை பற்றி விளக்கினர்.

## செனட்டர் அஸீஸ் ராஜினமா

கொழும்பு, வெள்ளி

கொழும்பு ஸஹிரா கல்லூரி அதிபர் செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்வதை அறிவிக்குமுகமாக கல்வி இலாகாவுக்கு ராஜினமா கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

திரு. அஸீஸ் 1911-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இலங்கை சிவில் சேவைச் சோதனையில் சித்திபெற்ற முதலாவது முஸ்லிம் ஆன இவர், 1948-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ம் திகதி கொழும்பு ஸஹிரா கல்லூரியின் அதிபரானர். சேர் முகம்மது மாக்கான் மரைக்கார் காலமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட காலியான செனட்டர் பதவிக்கு திரு. அஸீஸ் 1952-ம் ஆண்டு ஜூன்மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜி. ஸி. ஈ பரீட்சை

## '75 சத வீகித மாணவர்கள் தகுதியற்றவர்கள்'

### பரீட்சை இலாகா மதிப்பீடு

கொழும்பு, வெள்ளி

கடந்த மூன்று வருடங்களில் ஜி. சி. ஈ. (சாதாரணம், பரீட்சைக்கு தோற்றிய 75 சத விகித மாணவர்கள் எஸ். எஸ். ஸி. தராதரப் பத்திரம் பெறத் தகுதியற்றவாகளாகவோ அல்லது 6 பாடங்களையும் ஒரேமுறையில் சித்தி பெறத் தகுதியற்றவர்களாகவோ காணப்பட்டனர். பரீட்சை இலாகாவினுல் நடாத்தப்பட்ட பூர்வாங்க மதிப்பீட்டில் மேற்கண்ட விபரம் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இளம் வயதினராக இருக்கிறார்களென்றும் இதன் காரணத்தினுல்தான் ஏராளமான மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைகிறார்கள் என்றும் கூறினர். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 65 சதவிதமாணவர்கள் தேர்வுபெறவில்லை என்று இலாகா கண்டுபிடித்துள்ளது.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## புற்று நோய்

ஆயுள்வேத முறையில் "யோகீஸ்வர ரசம்" புற்று நோயை வேரோடு அறுக்கும் என்பதை செயல் முறையில் நிலை நாட்டியுள்ளோம். இந்நோயால் பீடிக்கப்பட்டோர் எம்மை உடனே கலந்து ஆலோசிக்கவும். இந்நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒருவர் அளித்துள்ள சான்றிதழ்:-

"எனக்கு வலது பக்க சொக்கினுள் புற்றுநோய் கண்டு பலரிடமும் காட்டி மாறாமல் எட்டு மாதங்களால் திரு. செல்லையா வைத்தியரிடம் 40 நாள் மருந்தில் பூரண சுகமடைந்து மூன்று (3) வருடங்கள் பார்த்துத்தான் வெளியிடுகின்றேன். சி. திரேசியா, 10-ம் வட்டாரம், அல்லைப்பிட்டி." இப்படியாக அநேகர் நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர். நேரில் கலந்து ஆலோசிக்குக.

பொ. செல்லையா, ஆயுள் வேத வைத்திய புற்று நோய் நிபுணர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

3 ஸ்ரீ தொடர்பிலக்கமுள்ள "பேர்ஜோ" (Peaugot 150 c c ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு— விபரங்கட்கு: 23, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

யோகாசன ஆசிரியை
**ஸ்ரீமதி சீதாலட்சுமி குமாரஸ்வாமி**

(ஆரோக்கிய ரகசியம், ஆஸ்துமாவிற்கு யோகாசன சிகிச்சை மற்றும் பல யோகாசன நூல்களுக்கு ஆசிரியை) 16-12-61 திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறார். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய முக்கிய இடங்களில் தங்கி, யோகாசனப் பொதுக் கூட்டங்களில் யோகாசனம் செய்து காண்பித்து, பிரசங்கித்தும், யோகாசன வகுப்புகளை நடத்தியும் ஆஸ்துமா, சலரோகம் மற்றும் பல நோய்களுக்கு யோக சிகிச்சை அளிக்கவும் செய்வார். விபரங்களுக்கு எழுதுங்கள். மனேஜர், ஆரோக்கிய யோகாஸ்ரமம், சென்னை-21.


# "விஸா முடிந்து சென்றவர் கள்ளத் தோணியில் வந்தாராம்"

## திருவாங்கூர் ரர்வுத்தர் கோர்ட்டில் தெரிவித்த தகவல்

மாவிட்டபுரம், வெள்ளி

"நான் இவ் வருடம் அக்டோபர் மாதம் 13-ம் திகதி மாலை ஆறு மணியளவில் மற்றும் முப்பத்தேழு பேர்களுடன் அதிராம் பட்டினம் என்னும் இடத்திலிருந்து ஒரு படகில் ஏறினேன். இலங்கையில் குடியேற அங்கு ஏதாவது வேலை பெறலாமென்ற நோக்கத்துடனேயே நான் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கள்ளத்தனமாக வரமுயன்றேன். நாங்கள் மொத்தம் முப்பத்தெட்டு பேர்கள் அத் தோணியில் ஏறினோம். மறு நாள் அதிகாலை 12-30 மணிக்கு எமது படகு இலங்கைக் கரையை வந்தடைந்தது."

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முத்துக்குமாருகணேஷ் என்பவர் சட்டவிரோதமாக பன்னிரண்டு கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு . புகலிடம் கொடுத்ததாக அவர் மேல் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமேதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தென் இந்தியாவிலுள்ள திருவாங்கூர் ஜில்லாவைச் சேர்ந்த எம்பக்கோடை என்னும் இடத்தைச் சேர்ந்த நயினர் ராவுத்தர் மொகிதீன் பிச்சை என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கையைச் சேர்ந்த கணேஷ் என்பவர்தான் என்னையும் என்னுடன் வந்த மற்றைய முப்பத்தேழு பேர்களையும் அக் கள்ளத் தோணியில் ஏற்றி இலங்கைக்குக் கூட்டிவந்தார். நான் முன்பு இலங்கையில் இருந்தேன். பின்னர் எனது விசா முடிந்ததும் நான் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டேன். எனக்குத் தெரிந்த இந்தியப் பிரஜைகள் சிலர் இலங்கையில் உள்ள குருநாகல் என்ற இடத்திலிருக்கின்றனர். நான் அவர்களைச் சந்தித்து இங்குவேலை பெறுவதற்காகவே அக்கள்ளத் தோணியில் வந்தேன். எங்களுடன் கணேஷும் அக் கள்ளத் தோணியில் வந்தார்.

### 26 பேர்கள் மறைந்தார்கள்

காங்கேசன்துறைக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் நாங்கள் வந்திறங்கினோம். நாங்கள் எல்லோரும் கரையில் இறங்கினோம். கணேஷ் எங்களை மணலிருக்கும்படி கூறிவிட்டுஎங்கோசென்றுவிட்டார். நாங்கள் மணலிலிருந்தோம். இப்படியிருக்கையில் எங்களுடன் வந்தவர்களில் இருபத்தாறு பேர்கள் எங்கேயோ மறைதுவிட்டார்கள். அவர்கள் எங்கே சென்றார்களென என்னால் கூறமுடியாது. கணேஷ் என்பவரை எனக்கு முன்னால் நிறுத்தினல் அவரை நான் அடையாளம் கண்டுபிடிப்பேன். அவர் இலங்கையில் எப்பகுதியைச் சேர்ந்தவரென்று என்னால் கூற முடியாது.

### பொலிஸ் 'ஜீப்' தான் வந்தது

எங்களை ஏற்றிச் செல்வதற்காக வான் கொண்டுவருவதாகக் கூறிவிட்டு கணேஷ் சென்றார். ஆனால் அவர் திரும்பி வரவில்லை. வான் வருமென எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் எங்களை ஏற்றிச் செல்ல பொலிஸ் ஜீப் தான் வந்தது. பொலிஸ்காரர்கள் அங்குவந்து எங்களைக் கைது செய்தனர் அப்பொழுது நான் அங்கு கணேஷைக்காணவில்லை. பொலிஸ்காரர்கள் எங்களை காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்றனர். பொலிஸ் நிலையத்தில் எங்கள் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. நாங்கள் பொலிஸ் நிலையத்தில் நிற்கும் போது கணேஷும் பொலிஸ் நிலையத்தில் நின்றார்.

எதிரிமீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டும். எதிரி கோர்ட்டில் ஆஜராகாததால் இரண்டாவது தடவையாக எதிரியைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கும்படி நீதிபதி கட்டளையிட்டார்.

காங்கேசன்துறைப்பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. பிரிட்டோ வழக்கை நடத்தினர்.

இவ்வழக்கில் சாட்சிகளான திருவாங்கூரைச் சேர்ந்த நயினர் முகமத் சேகு இஸ்மயில், நயினர் ராவுத்தர் மொகிதீன் பிச்சை ஆகியோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின் நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.


PPC

**யாழ்.குஞ்சு-உற்பவகம்**
இல. 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உடன் குஞ்சுகள்

வைற் லெக்கோன், பார்ட் பிலிமத் ரொக் அதிக முட்டை இடும் ஜப்பான் இனங்கள்.

**Jaffna Hatcheries**
No. 3, Stanley Road,
Jaffna.

### விற்பனைக்கு

போட்பிறிபெக்ற் கார் CL286 விற்பனைக்கு இருக்கிறது. சமீபத்தில் றிப்போர் செய்யப்பட்டது. செவ்வாய், சனிக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். ச. இராசரத்தினம், தலையாழி, கொக்குவில்.


### யாழ்ப்பாண இளைஞர் சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்படும் யாழ்ப்பாண தொழிற்பாடசாலை

1. மேற்படி பாடசாலையில் 1-1-62ம் திகதியில் இருந்து ஆரம்பமாகும் கீழ்வரும் வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது:-

1. மின்னியல் – ஒரு வருடம்
2. மோட்டார் தொழில் நுட்பம் - இரு வருடம்
3. தண்ணீர் இயந்திரம் விநியோகவழிகள் - 6மாதங்கள்
4. தையற்கலை - ஒரு வருடம்
5. வர்த்தகம் - (தமிழும், ஆங்கிலமும்) ஒரு வருடம்.

விண்ணப்பதாரர்கள் இவ்வலுவலகத்தில் இருந்து பெறப்படும் மாதிரிப் பத்திரத்தில் 25-12-61ம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் யாவரும் தங்கள் செலவில் 10-1-62ம் திகதி காலை 9 மணிக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு இவ்வலுவலகத்திற்கு வரவேண்டும்.

4. அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பின் வரும் தொகையை பாடசாலையில் சேரும்போது செலுத்தவேண்டும்.

1. பிரவேசக் கட்டணம் 5/- ரூபா, 2. வைப்புப் பணம் 25/- ரூபா, 3. மாதாந்தக் கட்டணம் 10/- ரூபா.

குறிப்பு: கட்டணங்களைச் செலுத்த வசதியற்ற மாணவர்களுக்கு மேற்படி கட்டணத்தில் இருந்து புறநீக்கஞ் செய்யப்படுவதுடன, உபகாரச் சம்பளங்களும் வழங்கப்படும். இப்பாடசாலையின் போதனமொழி ஆங்கிலமும் தமிழுமாக இருக்கும்.

T. SAMUEL THAMBIAH
இளைஞர் சமூக பொருளாதார பதிவுகாரர்.
அபிவிருத்திச் சங்க அலுவலகம்,
கில்னர் கட்டிடம், 426, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், 7-12-61.

## இ. போ. ச. ஊழியர்கள் விளையாட்டுப்போட்டி

முள்ளியவளை, வியாழன்

இலங்கையடங்கலுமுள்ள இ. போ. ச. ஊழியர்கள் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போட்டி ஒன்று, டிசம்பர் 8-ம் 9-ம் திகதிகளில், கொழும்பு பொலிஸ் மைதானத்தில் நடைபெறுவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பெண்களும் ஆண்களும் கலந்துகொள்ளும் இப் போட்டியில், ஓட்டம், குண்டெறிதல், தடைதாண்டி ஓடுதல் முதலியன இடம் பெறும்.

## ஆசிரியர்களுக்கு பிரிவுபசாரம்

ஓமந்தை, வெள்ளி

ஓமந்தையிலுள்ள கொந்தக்காரன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.விநாயகமூர்த்தி குருநாக்கல் மகாவித்தியாலயத்துக்கும் அதே பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர் திரு.செல்வரத்தினம் குருநாக்கல் சிங்கள கலவன் பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு ஓர் பிரியாவிடை வைக்கப்பட்டது.

# பாடசாலைகளைத் தரம் பிரிக்கும் முயற்சி

## இரு எம்.பி. க்கள் எடுக்கும் கூட்டுநடவடிக்கை

பருத்தித்துறை, வெள்ளி

பாடசாலைகளைத் தரம் பிரிப்பது சம்பந்தமாக ஆசிரியர்களது அபிப்பிராயங்களை அறிவதில் பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதி எம். பி. கள் கூட்டு முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

தலைமை ஆசிரியர்களது அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் பெற சனிக்கிழமையன்று மகாநாடொன்றைக் கூட்டுகின்றனர்.

இரு பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்க வடமராட்சித் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் சகல பாடசாலைகளின் தலைவர்கட்கும் ஹாட்லிக் கல்லூரியில் நடக்கும் இம்மகாநாட்டிற்கு வரும்படி கோரி அழைப்புக்களை அனுப்பிவைத்துள்ளார்.

## கல்கத்தாவில் அர்ஜன்டீனு அதிபர்

கல்கத்தா, டிச 7

பாங்காக் செல்லும் வழியில் அர்ஜன்டீனு அதிபர் திரு. பிரண்டிஸி இன்று கல்கத்தா வந்தார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினிய இன்டஸ்றீஸ் லிமிட்
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்

J. D

# "நான் கடையிலிருந்து அழுது கொண்டிருந்தேன்"

## கொலை வழக்கு விசாரணையில் சாட்சியம்

மாவிட்டபுரம், வெள்ளி

"காலஞ் சென்றவர் மாத்தறையிலிருந்து மல்லாகத்திற்கு லீவில் வந்துள்ளார் என எனக்குத் தெரியாது. இச் சம்பவம் நடைபெறுவதற்கு முன் நான் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தை காணவில்லை. முதலாவது எதிரியான கனகரத்தினம், சிவபாதசுந்தரத்தை துவக்கால் சுடுவதை நான் பார்த்தேன். அப்பொழுது தான் சிவபாதசுந்தரம் மல்லாகத்திற்கு லீவில் வந்துள்ளார் என நான் நினைத்தேன். சிவபாதசுந்தரம் எனதுமருமகன்".

ஏழாலையைச் சேர்ந்த செல்லையா சிவபாதசுந்தரம் என்பவரை துவக்கால் சுட்டுக் கொலை செய்ததாக மல்லாகத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களான தம்பிம்பிள்ளை கனகரத்தினம், தம்பிப்பிள்ளை நடராசா ஆகிய இருவர் மேலும் குற்றஞ்சாட்டி சுன்னுகம் பொலிஸாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் கொலை செய்யப்பட்டவரின் மாமனுன ஏழாலையைச் சேர்ந்த சின்னப்பு துரையப்பா என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:- "முதலாவது எதிரியான கனகரத்தினம், சிவபாதசுந்தரத்தை நோக்கி துவக்கால் சுடுவதை நான் பார்த்தேன். அப்பொழுது சிவபாதசுந்தரம் 'அம்மா' என கதறிக்கொண்டு நிலத்தில் விழுந்தார். அப்பொழுது 'டேய்' என கூறிக்கொண்டு நான் முதலாவது எதிரியை நோக்கிச் சென்றேன். உடனே அவர் கையில் வைத்திருந்ததுவக்கை என் பக்கம் நீட்டி 'நீயும் வாடா' எனக் கூறினுர். அப்பொழுது நான் பயந்து ஓடிச் சென்று மல்லாகம் பஸ்டிப்போவுக்கு அண்மையிலுள்ள ஓர் கடையினுள் இருந்து அழுதுகொண்டிருந்தேன்".

இச் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று வேலை முடிந்து வீடு செல்லும் போது இருவர் பேசும் சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தபொழுது முதலாவது எதிரி காலஞ்சென்றவரை நோக்கி துவக்கை நீட்டி சுடுவதைப் பார்த்தேன். இத் துவக்குச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றபோது முதலாவது எதிரி காலஞ்சென்றவர் நின்ற இடத்திலிருந்து சுமார் 14 அடி தூரத்திலிருந்து சுட்டார்.

"கொலை செய்யப்பட்ட சிவபாதசுந்தரம் எனது சொந்த சகோதரியின் மகன். அவரது குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்ப்பு உண்டு. நான் ஏழாலையைச் சேர்ந்தவன். காலஞ்சென்றவரும் ஏழாலையைச் சேர்ந்தவர்.

"இச் சம்பவம் நடைபெற்ற ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக நான் அக்கடையிலிருந்து அழுதுகொண்டிருந்தேன். சிவபாதசுந்தரத்தை யார் கொன்ருர்கள் என்ரே அல்லது நான் இச் சம்பவத்தைக் கண்ணுல் பார்த்ததாகவோ நான் ஒருவரிடமும் கூறவில்லை.

"நான இச் சம்பவத்தைப் பற்றிப் பொலிஸாருக்கு மட்டுமே முதலில் கூறினேன். அதற்கு முதல் நான் ஒருவருக்கும் கூறவில்லை. இக் கொலை பற்றி அதற்கு முதல் ஒருவரும் என்னை கேட்கவுமில்லை".

துரையப்பா, எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. பி. ஜே. செருபிம்மினுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது மேலும் கூறியதாவது:- "எனக்கு கனகரத்தினத்தைத் தெரியும். ஏழாலையைச் சேர்ந்த ராமலிங்கம் சிவஞானம், செல்லையா ரத்தினம், செல்லையா சிவஞானசுந்தரம், துரையப்பா ஞானசேகரம் ஆகியோரை எனக்குத் தெரியும். தம்பிப்பிள்ளை கந்தையாவை கொலை செய்ததாக ஆறு நபர்கள் மேல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த ஆறு நபர்களில் நானும் ஒருவன். அவர்கள் நால்வர் இலங்கை போக்குவரத்துச் சபையின் மல்லாகக் கிளையில் வேலை பார்ப்பவர்கள்".

தம்பர் ஞானமுத்து என்பவரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டபின் நீதவான் மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

---

**கோவா:**

## பிரிட்டிஷ் தூதருடன் லிஸ்பன் ஆலோசனை

லிஸ்பன், டிச 7

லிஸ்பனிலுள்ள பிரிட்டிஷ் தூதரை போர்த்துக்கல் அரசாங்கம் அழைத்து கோவா விஷயமாக விவாதித்ததாய்க் கூறப்படுகிறது.

---

## பென்ஷன் விபரம் தீர்மானிக்கப்பட்டது

கொழும்பு, வெள்ளி

மரணமான அரசாங்கசேவையாளரின் மனைவிமார் பலருக்கான பென்ஷன் விபரங்கள் இன்னும் சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. பென்ஷன் வழங்குவதில் இப்படியான தாமதம் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் எனத் திறைசேரி கவனம் எடுத்து வருகிறது.

சேவையாளர்கள் கடமையாற்றி வர இலாகாக்களிலிருந்து அவர்களது சம்பள டாப்புக்கள் திறைசேரிக்குக் காலாகாலத்தில் அனுப்பி வைக்கப்படாத காரணத்தாலேயே பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

---

## பரிதாப மரணம்

ஊர்காவற்றுறை, புதன்

வேலணை மேற்கில் வசிக்கும் தம்பையாவின் புதல்வி (16வயது) கிணற்றினுள் தவறி விழுந்தமையால் மரணமானுர். இப்பெண் தண்ணீர் அள்ளச் சென்ற போது இச் சம்பவம் நிகழ்ந்தது எனத் தெரிய வருகிறது.

---

# குற்றங்கள் அதிகரிப்பதற்குத் தரம்குறைந்த சினிமாவும் காரணம்

## பரிசளிப்பு விழாவில் பேச்சு

கம்பஹா, வெள்ளி

"ஏனைய ஆசிய நாடுகளிலுள்ள பௌத்தர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கையிலுள்ள பௌத்தர்கள் பத்தரைமாற்றுத் தங்கம் போன்றவர்கள். இலங்கைப் பௌத்தர்கள் மதுபானம் அருந்துவதையும், பெண் கடத்தல் போன்ற ஏனைய குற்றங்கள் செய்வதையும் கைவிடுவார்களானுல் ஏனைய ஆசிய நாடுகளிலுள்ள பொத்தர்களிலும் இலங்கைப் பௌத்தர்களே உன்னதமானவர்கள்".

இவ்வாறு வித்தியோதயப் பல்கலைக்கழக அதிபர் கலுக்கொண்டயாவே பன்சேகர மகாநாயக்க தேரோ, ஹொரகொல்லை ஸ்ரீ தர்மலோக தர்ம பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:-

தர்மப் பள்ளிக்கூடங்கள் பிரயோசனமற்றவை எனச் சிலர் கூறியுள்ளனர். கடந்த 35 வருடகாலமாக தர்மப் பள்ளிக்கூட விவகாரங்களில் ஈடுபட்டுள்ள தன்பேரில் தர்மப் பள்ளிக்கூடங்கள் மகத்தான சேவைகள் புரிந்துள்ளன என்பதை உறுதியுடன் நான் கூற விரும்புகிறேன். நாட்டில் குற்றச் செய்கைகள் அதிகரித்து வருவதற்குத் தரங்குறைந்த சினிமாக்கள் ஒரு முக்கிய காரணமாகும். ஒரு தாய் தாயைப்போலவும், ஒரு தந்தை தந்தையைப்போலவும் சரிவர வாழ்ந்துவந்தால் குற்றச் செயல்களுக்கு இடமிராது."

"மேடைகளிலும், வீடு உச்சிகளிலும் நின்று தேசிய பண்பாடுபற்றியும் பழக்கவழக்கங்கள் பற்றியும் பிரசாரம் செய்பவர்களுக்கு இந்தப் பதங்களின் அர்த்தமே தெரிவதில்லை" என திரு. எச். டபிள்யு அமரசூரியா பேசுகையில் கூறினுர்.

---

# இலங்கை - ரஷ்ய வர்த்தக உடன்படிக்கை

## மற்றைய நாடுகளுடனும் பண்டமாற்றுமுறை?

கொழும்பு, வெள்ளி

இப்பேதுள்ள இலங்கையிலுள்ள ரஷ்ய வர்த்தக தூது கோஷ்டியும் இலங்கையின் வர்த்தக அமைச்சும் திருப்திகரமான முறையில் தமது வர்த்தக பேச்சுவார்த்தைகளை செய்து முடித்துள்ளன என்று தெரியவருகிறது. இவ்வாரம் முடியுமுன்னர் இரண்டு நாடுகளும் வர்த்தக உடன்படிக்கை ஒன்றுக்குக் கைச்சாத்திட்டுக் கொள்ளும் என வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் மூலம் அறியக்கிடக்கிறது.

ரஷ்யா இலங்கையின் தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவற்றைப் பெருந்தொகையாக வாங்குவதற்கு உடன்பட்டுள்ளது எனத் தெரிகிறது. அத்தோடு கறுவா, கராம்பு போன்ற பல பொருள்களையும் இலங்கையிடமிருந்து ரஷ்யா வாங்கிக் கொள்வதற்கு விரும்புவதாகக் கூறியுள்ளது.

தேங்காய் எண்ணெய்,கொப்பரு, காரீயம் ஆகியவற்றையும் இலங்கையிடமிருந்து வாங்கிக் கொள்ள ரஷ்யா உத்தேசிக்கிறதெனத் தெரிகிறது.

பண்டமாற்று முறையிலேயே இலங்கையும் ரஷ்யாவும் வர்த்தக ஒப்பந்தஞ் செய்துள்ளன. உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்துவிட்டு அவற்றுக்குப் பதில் அலுமினியம், தகரம், சிமிந்தி, பெட்ரோலியம் போன்ற பல பொருள்களை ரஷ்யாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொள்ளும். அத்தோடு கோதுமைமா, சீனி ஆகிய உணவுப் பொருள்களையும் ரஷ்யாவிடமிருந்து இலங்கை பெறவிருக்கிறது. உணவுப் பொருள்கள் இறக்குமதித் தொகைகள் பற்றி இன்னும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் உணவுப் பொருள்களை வாங்கக் கொள்ள இலங்கை உடன்பட்டிருப்பதால் அவற்றுடன் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்துகொண்ட பின்னரே ரஷ்யாவிடம் வாங்கவிருக்கும் உணவுப் பொருள்களின் தொகை நிர்ணயிக்கப்படவிருக்கின்றன.

பண்டைமாற்று முறையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல இலங்கையுடன் வர்த்தக தொடர்பு கொள்ள விரும்புகின்றன.

ருமேனியா, பல்கேரியா, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸலவேக்கியா போலந்து ஆகிய நாடுககள் ஒவ்வொன்றினுமிருந்து அடுத்த ஆண்டு முற்பகுதியிலேயே 20,000 தொன் சீனி வாங்கிக் கொள்வதற்கு இலங்கை உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது.

---

# மூவர் கொண்ட விசாரணைச் சபை வேண்டும்

## மாநகர சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

மராமத்துப் பகுதி வேலைகளும் சுகாதாரப்பகுதி வேலைகளும் மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதால் இந்நகர அங்கத்தவர்கள் மூன்று பேரைக் கொண்ட சபையொன்றைத் தெரிவு செய்து அதில் மராமத்துப் பொறியியலாளரும் சுகாதார வைத்திய அதிகாரியும் இடம் பெற வேண்டுமென்றும் இச்சபை இந்தப் பகுதிகளின் விசாரணை அறிக்கைகளை சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்து வேலைகளைப் பூர்த்தி செய்யும்படி கோரும் பிரேரணையொன்றை யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டு வர உதவி மேயர் திரு. என். டி. செல்லத்துரை முன்னறிவித்தல் செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 13-ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

நகரின் சுகாதாரப் பாதுகாப்பை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரசபையின் 15 வட்டாரங்களிலும் டி. டி. ரி. தெளிக்க வேண்டுமென்று கோரும் பிரேரணையொன்றையும் கொண்டுவர திரு. எஸ். இராசரத்தினம் முன்னறிவித்தல் செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகரசபைக்கு ஓர் அச்சகம் நிறுவுவது பற்றி கொழும்பு மாநகரசபை அச்சகப் பிரதான உத்தியோகத்தரின் கடிதம்பற்றியும் இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

---

## பெற்ரோர்-ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

ஓமந்தை, வெள்ளி

பூந்தோட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்ரோர் ஆசிரிய சங்க அங்குரார்பணக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் சங்க உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. நீ. அந்தோனிப்பிள்ளை. உப தலைவர்: திரு.சி. தங்கவேலுத்தேவர். காரியதரிசி: திரு. ம. கந்தசாமி ஆசிரியர். தனதிகாரி: திரு. வ. தருமலிங்கம். நிர்வாக சபை உறுப்பினக்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

# தேயிலைஉற்பத்திச்செலவை குறைக்கவேண்டும்

## பிரசாரசபை ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

நீண்ட காலமாக வெளிமார்க்கெட்டில் தேயிலையின் விலை குறைவாகவே இருக்குமானுல் இலங்கை மயமாக உள்ள தேயிலைத் தோட்டங்களில் தேயிலை உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என இலங்கைத் தேயிலைப் பிரசாரசபை அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது. வெளிமார்க்கெட்டில் தேயலை விலை குறைந்துள்ளதாகையால், இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் பல நஷ்டத்துடனேயே தேயிலை உற்பத்தி செய்துவருகின்றன.

வர்த்தக, உணவு, கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவுக்கு தேயிலைப்பிரசாரசபை அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில், கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் தேயிலை விலை குறைந்துள்ளதாகக் கூறியுள்ளது. 1960-ம் ஆண்டில் இதே கால எல்லைக்குள் தேயிலை விலையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லையாம்.

வெளிச் சந்தையில் தேயிலை விலை குறைந்துள்ளதால் தேயிலை உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இங்கு ஏற்பட்டிருக்கின்றது.

---

# அன்பளிப்புக் கோரும் தபால் காரருக்குத் தண்டனை கிடைக்குமாம்

கொழும்பு, வெள்ளி

'கிறிஸ்மஸ்' சந்தோஷம் வழங்கும்படி வீட்டுக்காரர் எவரையும் தொந்தரவு செய்யும் தபால்காரர்களுக்குத் தபால் இலாகா தக்க தண்டனை விதிக்கும் எனத் தற்காலிகப் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. டி. சிவப்பிரகாசம் தபால் உத்தியோகத்தர்களுக்குத் தாம் விடுத்த சுற்றறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

தபால் இலாகா ஊழியர்கள் எவருக்கும் பொதுமக்கள் எதுவித உத்தரவும் வழங்க வேண்டியவர்களல்ல. திரு. சிவப்பிரகாசம் விடுத்த சுற்றறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"பொதுமக்களிடமிருந்து கிறிஸ்மஸ் உபகாரங்களையோ சந்தோஷ அன்பளிப்புகளையோ தபால் தொழிலாளர்கள் எவரும் கேட்டு வாங்கிக் கொள்ளக்கூடாது என இலாகா அவர்கள்மீது தடைவிதித்துள்ளது".

---

## உபதலைவர் தேர்தல்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதி கிராமசபைத் தலைவர்களின் சமாசப் பொதுக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு. கைலாசபிள்ளை தலைமையில் வேலணைக் கிராமசபைக் காரியாலயத்தில் நடைபெற்றபோது நெடுந்தீவு கி. ச. தலைவர் திரு. குமாரசாமி, சமாசத்தின் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. ப. கந்தசாமி சமாசத்தின் உப காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார்.

**மணி வாக்கு**

"மகிழ்ந்து கொடுப்பவரிடத்தும் இரந்து வாழாமை நன்று."

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ24 உ (9-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## பதிவுப் பிரஜைகளின் வாக்குரிமை

"உமது வாக்குரிமை ரத்துச் செய்யப்பட்டது. காரணம், பிரஜா உரிமை ஸ்தாபிக்கப்படவில்லை" என்ற குறிப்புடன் தேர்தல் அதிகாரியிடமிருந்து அநேக பதிவுப்பிரஜைகளுக்கு நோட்டீஸ் கிடைத்திருப்பதாக அப்புத்தளையைச் சேர்ந்த ஓர் அன்பர் தெரிவிக்கின்றார். பதிவுப் பிரஜைகளில் பலருக்கு வாக்குரிமை மறுத்துள்ளதாக ரக்குவானை செய்தியொன்று நேற்று "ஈழநாடு" பத்திரிகையில் வெளியாயிற்று.

பதிவுப் பிரஜைகள் ஒவ்வொருவரின் பெயரும், விலாசமும் அரசாங்கமே, தான் வெளியிடும் கெஸற்மூலம் அச்சடித்து பகிரங்கப்படுத்தியுள்ளது இத்துடன் பிரஜா உரிமைப் பத்திரமும், பதிவுப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வித அத்தாட்சிகள் வம்சாவளி பிரஜைகளுக்குக்கூட இல்லை. அப்படி இருக்க "பிரஜா உரிமை ஸ்தாபிக்கபபடவில்லை" என்று அதிகாரி காரணம் கூறி பதிவுப பிரஜைகளுக்கு வாக்குரிமை மறுத்துள்ளது திகைப்பளிப்பதாகும்.

தோட்டத்திலே தொடர்ந்து வசிக்கவில்லை என்று மற்றொரு காரணமும் இதற்குக் கூறப்பட்டுள்ளதாம். தோட்டங்களில் பரம்பரையாகத் தொடர்ந்து வசித்துவரும் பலருக்கும் கூட இவ்வித சடிதம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. மற்ற இடங்களிலே வீட்டுக்கு வீடு தேர்தல் சிப்பந்திகள் சென்று விசாரித்து, வாக்காளரின் பெயர்களைப் பதிவுசெய்துவருகின்றார்கள். அதேபோல் தோட்டப்பகுதிகளிலும் தேர்தல் அதிகாரிகள் சென்றார்களா இல்லையா? தொடர்ந்து பல வருடங்கள் இலங்கையில் வசித்தவர்களென்று, நிரூபித்தவர்களுக்கே பதிவுப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. அப்படி வழங்கப்பட்ட தோட்டத்தொழிலாளருக்கு, இங்கு தோட்டத்தைத் தவிர போக்கிடம வேறு இல்லை. அப்படி இருக்க, அவர்கள் தோட்டத்தில வசிக்கவில்லை என்று காரணம் கூறி அவர்களுக்கு வாக்குரிமை மறுப்பது விபரீதமாகும். ஏற்கெனவே பிரஜா உரிமைக்காக வாசகாலத்தை நிரூபித்து தீர்ப்புப் பெற்றவர்கள், மீண்டும் வாக்குரிமை பெறுவதற்கு அதேமாதிரி நிரூபிக்கவேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றதா? மற்ற வம்சாவளிப் பிரஜைகள் யாருக்குமே இதே மாதிரி நிபந்தனைகளைப்போட்டு, வாக்குரிமை மறுத்துள்ளனரா? அல்லது பதவுப் பிரஜைகளுக்கு மட்டும் இந்தப புதிய நிபந்தனைபோட்டு அவர்களது வாக்குரிமைபாதிக்கபபடுகின்றதா?

வாக்குரிமையற்ற பிரஜா உரிமை, உயிரற்ற உடலுக்கு ஒப்பாகும். ஏற்கெனவே பிரஜா உரிமைக்காக மனுச்செய்தவர்களில் எட்டில் ஒரு பகுதியினருக்கும் அவ்வுரிமை கிடைக்கவில்லை. மிகவும் சிரமப்பட்டு அது கிடைத்தவர்களுக்கும்கூட, வாக்குரிமையை சில அற்பகாரணங்களைக் கூறி பறிக்க முயலுவதாயின் அது அரசியல் நாணயமாகாது. இலங்கை இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க, இந்தியாவுடன் பேச்சுகள் நடதத விரும்பும் அரசாங்கம், அப்பிரச்சினையை இவ்வித நிர்வாகக் காரியங்கள்மூலம் அதிக சிக்கலாக்கி வருகின்றது. இவ்வித நடவடிக்கைகள் இப்பிரச்சினையைத் தீர்க்க உதவமுடியாது.

பதிவுப் பிரஜையானவர்களுக்குச் சென்ற பல வருஷகாலமாக வாக்குரிமை அளிக்கப்பட்டுவந்திருக்கையில், திடீரென இப்போது அது மறுக்கப்படும் மர்மம் விளங்கவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. எஸ். தொண்டமான் இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்திவருவதாகத் தெரிகிறது. இதன் பயனாக இந்தப் புதிய சிக்கல் தீர்ந்து. பதிவுப்பிரஜைகள் வேற்றுமைப்படுத்தப்படாமல், அவர்களுக்குத் தொடர்ந்து வாக்குரிமை கிடைக்குமென்றே நம்புவோம். இதுபற்றி பலர் மனதிலும் பல பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதால், நிலைமையை விளக்கி, உடன் அரசாங்கம் அறிக்கை வெளியிடக் கடமைப்பட்டுள்ளது.

# பூமியின் நிழலில் சென்றேன்

## வான வெளியில் எனது சாதனை

– மேஜர் யூரி ககாரின் –

**அநேக மக்கள் எனது சுயசரிதையை அறிய விரும்புகிறார்கள். "நான் ஒரு அரச குடும்பத்தவன் எனக் கூறிக்கொள்பவர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள் என அறிகிறேன். 'ககாரின் இளவரசர்கள்' எமது தூரத்து உறவினர்" என்று சில அமெரிக்கர் கூறுவதாகப் பத்திரிகைகளில் படித்தேன். ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு நான் சொந்தக்காரன் என அவர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள். சிந்தனை எதுவுமின்றிச் சிரிப்பூட்டும் முறையில் என்னைத் தமது உறவினர் எனக் கூறுகின்றனர்.**

நான் ஒரு சாதாரண ரஷ்ய மனிதன். 1934-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி ஸ்மொலென்ஸ்க் என்னும் பகுதியிலுள்ள காட்ஸ்க் மாகாணத்தில் நான் பிறந்தேன். எனது தந்தை ஒரு சாதாரண விவசாயி. எனது உறவினரிடையே பெருமக்கள் குடியினரோ இளவரசர்களோ இருந்தார்கள் என்பதுபற்றி நான் கேள்விப்படவில்லை. புரட்சிக்கு முன்னர் எனது பெற்றோர் ஏழைகளாக இருந்தார்கள். எனது பேரனும் ஒரு ஏழைதான். எம்மிடையே இளவரசர் எவருமே இருந்ததில்லை.

பெருமக்கள் குடியில் பிறந்த அந்தச் சொந்தக்காரர்களுக்கு எனது பரிதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனல் அவர்களை நான் ஏமாற்றவேண்டியவனுகின்றேன்.

### பறக்கும் ஆசை

மாஸ்கோ பகுதியிலுள்ள லிரப்பேர்ட்ஸி என்னும் நகரிலுள்ள வர்த்தக பள்ளிக்கூடமொன்றில் நான் பயின்றேன். பின்னர் சறட்டோவ்விலுள்ள கைத்தொழிற் பள்ளிக்கூடத்தில் வார்ப்படத் தொழிலைப் பயின்றேன். ஆனல் நான் ஒரு 'பைலட்' ஆகி வானத்தில் பறக்க வேண்டும் என அதிகம் விரும்பினேன். 1955-ல் எனது கைத்தொழில் பள்ளிக்கூடப் படிப்பை முடித்துக் கொண்டேன். சறட்டோவ் விமான கழகத்தில் விமானம் செலுத்தக் கற்றுக் கொண்டிருந்தேன். இதே ஆண்டில் இந்தப் பயிற்சியையும் முடித்துக்கொண்டு ஓரென்பேர்க் விமானப் பயிற்சிக்கழகத்தில் 1957-ம் ஆண்டுவரை பயின்றேன். இந்த ஆண்டில் யுத்த விமானக் கப்பலின் 'பைலட்' ஆகினேன்.

சோவியத் ரஷ்யாவின் ராணுவப்படையில் நான் சேர்ந்து கடமையாற்றி வந்தேன் எனது வேண்டுகோளின் பேரிலேயே வானவெளிப் பிரயாணியாக விரும்புவோர் குழுவில் நானும் ஒருவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதன் பயனுக இன்று ஒரு வான வெளி மனிதனுகிவிட்டேன்.

எமது விஞ்ஞானிகளால் அதிக ஆராய்ச்சியுடன் திட்டமிடப்பட்ட பயிற்சி அத்தனையையும் கற்றேன். விஞ்ஞான அக்கடமியின் தலைவர் இப்பயிற்சிகள் அனைத்தையும் பற்றி விவரமாகக்கூறியுள்ளார். விஞ்ஞான கருவிகள் அத்தனையையும் நனகு கற்று வானவெளிப் பிரயாணத்துக்குத் தயாரானேன்.

### நாட்டின் பேரில் சாதனை

என்னிடம் இந்தப் பிரயாணத்தை ஒப்படைத்தற்காக



எமது அரசாங்கத்துக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவன். எனது நாட்டின் பேரிலும் சோவியத் மக்களின் பேரிலும், சோவியத் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் பேரிலுமே நான் எனது சாதனையைச் செய்துள்ளேன்.

வானவெளிப் பிரயாணத்தின்போது நிலைமைகள் யாவும் எனக்குச் சௌகரியமாகவே இருந்தன. விஞ்ஞானிகள், என்ஜினியர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள் உட்பட அனைவரும் இந்தப் பிரயாணம் வெற்றிகரமாகவேமுடியும் என நம்பினர்.

முன்னர் ஏற்பாடுசெய்த திட்டத்தின்படியே நான் பிரயாணத்தின் போது செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தேன். நான் உணவு உண்டேன். நீர் அருந்தினேன். தொலைபேசி, தந்தி மூலமாகப் பல வழிகள் மூலம் பூமியுடன் 'றேடியோ' தொடர்பு வைத்திருந்தேன். யந்திர உபகரணங்கள் தொழிற்படுவதை அவதானித்து பூமிக்கு அறிவித்தேன். "டேப் றெக்கோர்டர்" ஒன்றிலும் விவரங்களைப் பதிவு செய்துகொண்டேன். முழுப் பிரயாணத்தின் போதும சுகமாக இருந்த நான் குறிக்கப்பட்ட இடத்திலேயே வந்து இறங்கினேன். எனது அன்புமிக்க சோவியத் மக்களை ஆனந்தத்துடன் சந்தித்தேன். வான வெளியில் நான் அவதானித்தவை பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

சுமார் 175 — 300 கில்லோமீட்டர் உயரத்துக்கப்பால் பூமியானது கண்ணுக்கு மிகவும்

(5ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

## தரகரிடம் சிக்காதீர்!

பதுமன்

தரகர்களின் தேன்மொழிகளை நம்பி இலங்கையில் சட்ட விரோதமாகக் (கள்ளத்தனமாக) குடியேறுவோருக்கு நேரும் துன்பங்களை விளக்கும் வகையில் இந்திய அரசினர் வெளியிட்டுள்ள "எச்சரிக்கை" பயனுள்ள ஒரு முயற்சியாகும்.

தரகர்களின் பசப்பு வார்த்தைகளும் உறுதி மொழிகளும் வெறும் பித்தலாட்டம் எனவும் சட்ட விரோதமாகக் குடியேற விரும்புவோர் தமக்கு என்ன நேரும் என்பதை அறியமாட்டார்களெனவும் அந்த வெளியீடு எச்சரிக்கை செய்துள்ளது.

இந்தியப் பொலிசாரிடம் சிக்காமல் இலங்கை செல்வதற்காக நள்ளிரவில் இரகசியமாக படகுகளிற் புறப்பட்டுச் செல்வார்கள். அலைகள் உயரமாகக் கிளம்பி, காற்றும் சற்று வேகமாக அடித்தால் படகு கவிழ்ந்துவிடும். அல்லது பாறைகளில் மோதி நொறுங்கிவிடும், இப்படிக் கள்ளத்தனமாக குடியேற விரும்பி மூடச் செயலில் இறங்குபவர்கள் ஈவிரக்கமின்றிக் கடல் விழுங்கிவிடுகின்றதென்பதைப் படிக்கும்போதே பயங்கரமாக இருக்கின்றது.

### துன்ப வாழ்வு

அபாயங்களிலிருந்து சமாளித்துக் கரை சேர்ந்தவர்களின் நிலை பாதுகாப்புடையதாகிவிடாது. சிறிது காலத்துக்கு இலங்கையில் அவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடும். கிடைத்தாலும் கள்ளக் குடியேற்றப் பயம் எப்பொழுதும் மனத்தில் உறுத்துவதால் எத்தனையோ கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு அடிமை வாழ்க்கை நடாத்துவர். உளவாளிகள் இருப்பதால் பொலிசாரிடம் சிக்கிக் கொள்வார்கள். பின்னர் மிகுந்த இன்னல்களுக்குள்ளாகி இந்தியா திரும்ப வேண்டும்.

கள்ளத்தனமாகக் குடியேறுவோருக்கு இந்தக் கதிதான் நேரும். இதைக் காட்டிலும் இந்தியாவில் சொந்த ஊரிலேயே இருப்பது எவ்வளவோ மேல் என அந்த வெளியீடு புத்திமதி கூறுகின்றது. அது மேலும் தெரிவிப்பதாவது:-

"தந்திரமாக ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்ட தரகரிடம் சிக்காதீர்கள். அவர்களை எங்கேனும் சந்தித்தால் பொலிசாரிடம் உடனே ஒப்படைத்துவிடுங்கள். இலங்கைக்குச் செல்லும் ஆசையை விட்டொழியுங்கள். உங்கள் தாய்நாட்டின் அபிவிருத்திக்காக, உங்கள் பரம்பரை தொழிலில் ஈடுபட்டு, உங்கள் உற்றார் உறவினருடன் கூடி எத்தனையோ பணியாற்றும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. சொந்த நாட்டிலிருந்துகொண்டே நவபாரதத்தை நிர்மாணிக்கும் மகோன்னதமான பணியில் நீங்களும் பங்குகொள்ளுங்கள்."

### விழுந்த மரம்

முள்ளியவளையைச் சேர்ந்த தனியூற்றுச் சைவப் பாடசாலையின் வெள்ளி விழா சமீபத்தில்

(5 ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

எண்பது வயதான மாஸ்டர் தாராசிங், டில்லியிலே சீக்கிய கோவிலில், பக்தர்களின் பூட்சுகளை சுத்தம் செய்யும் படமொன்றை இந்திய பத்திரிகையில் கண்டேன்.

சீக்கியர்களுக்குத் தனி ராஜ்யம் கிடைக்கவேண்டுமென்றும் அதற்காக சாகும்வரை உண்ணுவிரதம் இருப்பதாகவும் கூறி. 48 நாள் பட்டினி இருந்தார் தாராசிங். ஆனல் அந்த நிபந்தனை நிறைவேறுத நிலையிலே அவர் உண்ணுவிரதத்தை விட்டுவிட்டார்.

இதற்காக, சீக்கிய தீவிரவாதிகள், குருமார்கள் மூலம் 5 வித தண்டனை விதித்துள்ளனர். (1) சீக்கிய வேதமான கிரந்த் சாகிப்பை தொடர்ந்து இராப்பகலாக ஓத தாராசிங் ஒழுங்குசெய்யவேண்டும். (2) தினசரி பிரார்த்தனையுடன் ஒரு மாதகாலத்துக்கு அவர் தீவிர சீக்கிய தலைவரான குரு கோவிந்தசிங்கின் உபதேசங்களையும் படிக்கவேண்டும். (3) 125 பேருக்கு 'காராபிரசாத்' என்ற இனிப்புப்பண்டங்களை வழங்க வேண்டும். (4) ஏதாவது ஒரு சீக்கிய கோவிலில் 5 நாட்களுக்கு பக்தர்களின் சப்பாத்துக்களை துடைத்து சுத்தம் செய்ய வேண்டும். (5) சீக்கிய இலவச சமையல் அறையிலே 5 நாட்களுக்கு பாத்திரங்களை அவர் கழுவவேண்டும்.

சீக்கிய குருமார் விதித்த இத்தண்டனையை ஏற்று மாஸ்டர் தாராசிங் பூட்ஸ் துடைக்கின்றார். 48 நாள் அரசியல் உண்ணுவிரதம் இருந்ததின் பலன் இதுதான்!

ஃ ஃ ஃ

மேற்குறித்த தண்டனையின்படி அகாலி தலைவர் தாராசிங், ஒரு பாத்திரத்தைத் தேய்க்க ஆரம்பித்ததும், அங்கிருந்த அந்நியர் ஒருவர் ஆத்திரம் கொண்டு "இது அநியாயம், அநியாயம்! ஒரு கிழவனரை இப்படிச்செய்ய விடக்கூடாது" என்று கத்தினர்.

செய்த தவறுக்காக அவர் "பிராயச்சித்தம்" செய்வதாயும் இதைத் தடுக்கக்கூடாதென்றும் பக்கத்திலிருந்தவர்கள் விளக்கினர். என்றாலும் அந்த அந்நியர் ஒப்பாமல், மிக கோபத்துடன் வெளியேறிவிட்டார்.

மாஸ்டர் தாராசிங்கோ வாய் பேசாமல், மெதுவாக ஜபம் செய்து கொண்டு தமது தண்டனையை நிறைவேற்றினர்.

சீக்கியருக்கு தனி ராஜ்யம் கிடைக்காவிடில், மீண்டும் தாம் சாகும்வரை உண்ணுவிரதமிருக்கப்போவதாக நேரு அரசாங்கத்தை அவர் பயமுறுத்தலாமென்றுகூறப்படுகிறது, ஐயோ பாவம்!

நமது அரசியல் வாதிகளில் யாரும், அளிக்கும் வாக்குறுதிகளை மீறினல், மேற்குறித்தபடி தண்டனை விதிக்க இங்கும் அப்படி யாரும் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! ஆனல்.........

ஃ ஃ ஃ

இம்முறை திருவையாற்றிலே ஸ்ரீ தியாகராஜ உற்சவம்ஜனவரி 25, 26, 27ம் திகதிகளில் நடைபெறுகிறது. உற்சவம்பற்றி ஒரு வழக்கு இப்போது கிளம்பியிருக்கிறது. சமாதிக்கு எதிரே, வித்வான்கள் கூடி பஞ்சரத்ன கீர்த்தனைகளை சேர்ந்து பாடுவது வழக்கம். அது அஞ்சலும் செய்யப்படும். அங்கு இனி பாடக்கூடாதென்றும், தாங்களே உற்சவததைத் தனியே நடத்தப்போவதாயும், சமாதி டிரஸ்டி சபையினர், உற்சவம் நடத்தும் சபையாருக்கு நோட்டீஸ் கொடுத்தனர்.

உற்சவ சபையாரோ, தாங்கள் இம்முறை உற்சவத்தை கல்யாண மகாலில் இன்றி சமாதிக்கு எதிராகவே நடத்தப்போவதாகக் கூறி, வழக்குத் தொடுத்துள்ளனர். அடுத்த வாரம் இவ்வழக்கு விசா

(5-ம் பக்கம் பார்க்க)

# எம். பி. க்களுக்கு குறைந்த செலவில் விடுதி வசதிகள்

கொழும்பு, வெள்ளி

எம். பி. க்களும், செனட்டர்களும் நுவரேலியாவிலுள்ள விடுமுறைகால விடுதியொன்றில் தங்கிப் பொழுதுபோக்குவதற்கு, அவர்களுக்குக் குறைந்த செலவில் பல வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கு உத்தியோகபூர்வமாகத் தங்குவதற்கென நுவரேலியாவில் அமைக்கப்பட்டிருந்த 'ஜெனரல்ஸ் லொட்ஜ்' என்னும் விடுமுறைகால விடுதியே இப்போது எம் பி. க்களும், செனட்டர்களும் சென்று தங்கிக் காலங்கழிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய செலவு விகிதங்கள் பற்றி எம். பி. க்கள் அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

'ஜெனரல்ஸ் லொட்ஜ்' எட்டு அறைகளைக் கொண்ட மேல்மாடி பங்களாவாகும். தளபாட வசதிகளும், ஏனைய வசதிகள் அனைத்தும் அங்கு உள. இரண்டு படுக்கையறைகளும் ஒரு உள் வராந்தாவும் கொண்'. இடத்துக்கு நாளொன்றுக்கு 4 ரூபாய்மட்டுமே வாடகையெனத் தெரிகிறது. சுவையான இராப் போஜனம் ஒன்று இரண்டு ரூபாய்க்குக் கிடைக்குமாம்.

'ஜெனரல்ஸ் லொட்ஜில்' தங்குவதற்கு முன்னர் நாளொன்றுக்கு 7 ரூபாய் 50 சதமாக இருந்ததனுல், முன்னைய எம். பி. க்கள் அங்கு அதிகம் தங்கவில்லையெனத் தெரிகிறது.

## பூமியின் நிழலில்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகத் தெரியும். விமானக் கப்பல்களில் பறக்கும்போது பூமியின் மேற்பரப்பு எப்படிக் கண்ணுக்குத் தெரியுமோ அப்படியே 175, 300 கில்லோ மீட்டர்களுக்கு அப்பாலும் தெரியும் பெரிய மலைத் தொடர்களும், பெரும் ஆறுகளும், காடடுப்பிரதேசங்களும், கரையோரப்பகுதிகளும், தீவுகளும் கண்ணுக்கு மிகவும் தெளிவாகப் புலனுகும். பூமியை மூடியிருக்கும் புகார்களும் இப்புகார்களினுல் பூமி மீது உண்டாகும் நிழல்களும் நன்ருகக் கண்ணுக்குப் புலப்படும். ஆகாயம் ஒரே இருட்டாகவும் நட்சத்திரங்கள் அதிகமாக ஜொலித்துக்கொண்டும் காணப்படும். பூமியைச் சற்றி அழகான நீல ஒளிவட்டம் காணப்படும். அடிவானத்தை நோக்கும் போது வானத்தின் நிறம் மாறுவது புலனுகும். மெல்லிய நீலம் சிறிது சிறிதாக நீலமாக மாறி, கடும் நீலமாகி, ஊதாவாக மை நிற கருமையாக மாறும். பார்ப்பதற்கு இது மிக ரம்மியமான காட்சி.

### பூமியின் நிழலில்

நிழலுலகிலிருந்து சூரிய வெளிச்சத்துக்கு சென்றேன். அப்போது ஒளி வட்டத்தின் வர்ணம் வேறுபட்டிருந்தது. ஒளிமிக்க செங்கல் நிறம் பின்னர் வானவில்லின் நிறங்கள் எல்லாமாக மாறியது. இவை அனைத்தையும் பூமியின் மேற்பரப்பிலேயே காணமுடிந்தது.

திடுதிப்பென பூமியின் நிழலில் சென்றேன். அங்கு ஒரே இருட்டுமயம். எதையும் காண முடியவில்லை. இந்தச்சமயத்தில் பூமியின் மேற்பரப்பில் எதையும் நன் அவதானிக்கவில்லை. நான் ஒரு சமுத்திரத்தின் மேலாகச் சென்று கொண்டிருந்தேனுகையால் மேலும் எதையும் காணமுடியவில்லை பெரிய நகரங்கள் இருந்திருந்தால் ஒளி விளக்குகளைக் கண்டிருப்பேன். நட்சத்திரங்களை நன்கு காணமுடிந்தது. பூமியின் நிழலில் இருந்து வெளியேறிய செயலும் மிக விரைவாகவே நடைபெற்றது. வான வெளிப் பிரயாணத்தின் பயன்கள் அனைத்தையும் நான் ஏற்றுக் கொண்டேன். நான இப்போது மிக்க தேக சுகத்துடனேயே இருக்கிறேன்.

## கிணற்றுள் விழுந்து சிறுவன் மரணம்

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த முதலி கணபதியன் மகன் தாமரைச் செல்வம் கிணற்றில் விழுந்து மரணமானுர். மரண விசாரணை அதிகாரி திரு. சு. நல்லைநாதன் விசாரணை நடத்தினுர்.

காலஞ் சென்றவரின் சகோதரியான கணபதி இராசமணி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ் சென்றவரும் மற்ற 4 இளைய சகோதரர்களும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். நான் குசினியில் சமையல் செய்துகொண்டிருந்தேன். பிள்ளைகளின் அவலக்குரல் கேட்டு போய்ப்பார்த்தபோது காலஞ் சென்றவர் பக்கத்தில் உள்ள கிணற்றினுள் தத்தளிப்பதைக் கண்டேன. நானும் பிள்ளைகளுடன் சேர்ந்து சத்தமிடவே ஆழ்வான் கிட்டிணன் வந்து காலஞ் சென்றவரைத் தூக்கினுர். அவர் இறந்துவிட்டார்.

முதலி கணபதி, ஆழ்வான் கிட்டிணன் ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி தற்செயலாக ஏற்பட்ட விபத்தால் நேர்ந்த மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## இரத்தினக் கம்பளம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. விழாவுக்குத் தலைமைவகித்த வவுனியா வித்தியாதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் இவ்விழாவில் விழுந்த மரத்தின் கதை ஒன்றைக் கூறியிருந்தார். நமது நிருபர் தெரிவித்தவாறே அதனை இங்கு தருகின்றேன்.

விழுந்துகிடந்த மரம் ஒன்றை ஒரு திருடன் இருளிற் கண்டு பொலிஸ்காரன் எனப் பயந்து ஒதுங்கினுன். சிறு குழந்தை ஒன்று அம்மரத்தைக் கண்டு 'பேய்' எனப் பிரலாபித்து அழுதது சந்நியாசியார் ஒருவர் அதனைச் சிவலிங்கமெனக் கண்டு 'நமசிவாய' எனக் கூறி அதனை வீழ்ந்து வணங்கினுர்.

ஒரே பொருள் காண்பவரின் வேறுபாட்டால் வெவ்வேருகக் காட்சி தருகிறது. ஆனுல் உண்மைப் பொருள் ஒன்றே. உண்மையை அறிதலே அறிவாகும். எப்பொருள் எத்தன்மைத்தாயினும், யார் யார் வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நீதிமன்றத்தில் நடைபெறும்.

இவ்விரு கட்சிகளும் இப்படிக் கூற, அந்த இடம் தங்களுக்கே சொந்தமென்றும், தங்கள் அனுமதியின்மீதே அங்கு யாரும் உற்சவம் நடத்தலாமென்றும், மற்ருெருவர் சொல்லுகிருர். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த மகான் தியாகராஜர் என்ன நினைக்கிருரோ!

⁂ ⁂ ⁂

தோட்டத்திலே அதிகரிக்கும் ஜனநெருக்கத்தைக் குறைக்க இந்தியாத்திரைக்கான தடைகளை தற்காலிகமாகவாவது நீக்கவேண்டுமென்று, இலங்கை விவசாய உற்பத்தி சங்கத்தார் கேட்டுள்ளனர். அரசாங்கம் இதற்காவது செவி சாய்க்குமா?

---

மனித வரலாற்றில் எனது நாட்டு மனிதனே முதல் முதலாக வான வெளிட்பிரயாணம் செய்தான் என்பதையிட்டு நான் எல்லையற்றமகிழ்ச்சியடைகிறேன்.

## கைத்தொழில்களுக்கு மக்கள் வங்கி உதவி

கொழும்பு, வெள்ளி

தனிப்பட்டவர்கள் தாங்களாகவே நிறுவும் சிறு கைத்தொழில் நிலையங்களுக்கு மக்கள் வங்கி கடன் வழங்குகிறது. இப்படியான கைத்தொழில் நிலையங்களுக்கு இது வரை மக்கள் வங்கி சுமார் ஒரு லட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது

தனிப்பட்ட கைத்தொழில் நிலையங்களுக்கும் மக்கள்வங்கி ரூ. 25,000 வரை கடன் வழங்கியுள்ளது. இதற்கு முன்னர் இக்கைத்தொழில் நிலையங்களுக்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் கடன் வழங்கியது. மக்கள் வங்கி ஆரம்பித்துள்ள கடன் வசதியினுல் சிறு வர்த்தகர்களிடமிருந்தும் கைத்தொழில் நிலையங்களிடமிருந்தும் ஏராளமான மனுக்கள் வந்துள்ளன. இதில் அநேக மனுக்கள் ஆயிரம் ரூபாயும் அதற்குள்ளும்தான் கடன் கோரியுள்ளன.

# ககாரினுக்கு....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வேற்பார். இவர்களுடன் இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும் கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத்துக்கு காரைநகர் யால்டன் கல்லூரி மாணவர் ஒருவர் மலர்மாலை சூட்டி வரவேற்பளிப்பார். பலாலி விமான நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சமுத்திரம் போல் திரண்டிருப்பார்களென்பதற்காக முன்னேற்பாடாக விசேஷ பொலிஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. விமான நிலையத்தில் எம். பீ.க்கள் கல்விமான்கள், பிரமுகர்கள், யாழ்ப்பாணம் மேயர், வடபிரதேச வித்தியாதிபதி கல்வி அதிகாரிகள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கிருர்கள்.

### திறந்த காரில் பவனி

அங்கிருந்து காலை 11-05க்கு பலாலி வீதிவழியாக திறந்த காரில் ஊர்வலமாக, ஆஸ்பத்திரிவீதி, மகாத்மாகாந்தி வீதி, முற்றவெளி வீதி வழியாகச் சென்று யாழ்ப்பாண நகர மண்டபத்துக்கு 11-30 மணிக்கு வந்தடைவார்கள்.

### 'பல்கனி'யில் காட்சி

யாழ்ப்பாண நகரமண்டபத்திற்கு வந்தடையும் மேஜர் ககாரினை மேயர் திரு. டி. எஸ். துரைராசா வரவேற்று நகர மண்டபத்தின் மாடி முகப்புக்கு அழைத்துச் செல்லுவார்.

அங்கு மேஜர் ககாரின், கல்வி அமைச்சர் ஆகியோரை முறையே யாழ்ப்பாணம் ஸ்ரான்லி மத்திய கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி மாணவர்கள் மலர்மாலைசூட்டி வரவேற்பார்கள். திருமதி ககாரினைச் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி மலர்ச்செண்டளித்து வரவேற்பார்.

### தமிழில் வரவேற்புப் பத்திரம்

ரஷ்யாவைச் சேர்ந்த முதலாவது வானவெளிப் பிரயாணியான மேஜர் ககாரினுக்கு இலங்கைத் தீவின் தமிழ்ப் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் ஓலைச்சுவடியில் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவர் வாசித்தளிப்பார்.

### திருமதி ககாரினுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் மேஜர் ககாரினுக்கு உள்ளூர் தேக்க மரத்தினுல் செய்யப்பட்ட வேலைப்பாடமைந்த உலாத்தடியொன்றை அன்பளிப்பாக வழங்குவார். திருமதி ககாரினுக்கு சித்திரவேலைப்பாடமைந்த தங்கப் பதக்கமொன்றைத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஒருவர் வழங்குவார்.

மேஜர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சில நிமிஷம் பேசுவார்.

காலை 11-45க்கு வரவேற்பை முடித்துக்கொண்டு 11-50 மணிக்கு அரசாங்க அதிபரின் விடுதிக்குச் செல்லுவார். அங்கு கேர்னல் ஏ. ஆர். உடுகம நண்பகல் போசனம் அளிப்பார். இதில் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வர். மாநகரசபை மண்டபத்திலிருந்து மெயின் வீதி, கஸ்டி வீதி வழியாகச் சென்று அரசாங்க அதிபரின் இல்லத்தை அடையவும் ஏற்பாடாகியிருக்கிறது.

பிற்பகல் 12-50க்கு அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதி, பருத்தித்துறைவீதி, அரசடி வீதி, கந்தர்மடம் சந்தி, பலாலி வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பலாலி விமான நிலையத்தை அடைவார் மாலை 1-20க்கு விமானத்தில் அவர்கள் பிரயாணமாவர்.

ஊர்வலமாக அழைத்துவரப்படும் இடங்களிலெல்லாம் வழிநெடுகிலும் கல்லூரி அதிபர்கள் மாணவர்கள மலர்மாலை சூட்டி வரவேற்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

### உரும்பிராயில்

வானவெளி முதற் பிரயாணி மேஜர் யூரி ககாரின் தம்பதிகளுக்கு ஒரு வரவேற்புபசாரம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். ஆசிரியர், மாணவ மாணவிகள், சாரணர், பெண் வழிகாட்டிப் படையினர் அவருக்கு வீதி இரு மருங்கும் நின்று தமது வணக்கத்தைத் தெரிவிப்பர்.

கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்தியலிங்கம்வானவீரருக்கு மலர்மாலை அணிந்து கௌரவிப்பார்.

# 'கோவா மத்திய நிர்வாகத்தில் கொண்டு வரப்படும்'

## விடுதலை அதிக்தூரத்திலில்லை என நேருஜீ அறிவிப்பு

புதுடில்லி, டிச. 8

**கோவா பாரதத்துடன் இணையும்போது அது புதுச்சேரியைப்போல் மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகப் பொறுப்பில் கொண்டு வரப்படும் என்றும், அதன் தனித்தன்மை நிலைநிறுத்தப்படும் என்றும் பிரதமர் நேரு லோக சபையில் இன்று அறிவித்தார்.**

கோவா விடுதலை அடைந்த பின் அதன் தனித்தன்மையை அகற்றும் எண்ணம் எக்களுக்கில்லை என்ருர். பிரெஞ்சு இந்தியப் பகுதியான புதுச்சேரி ராஜ்யத்தைப்போல் கோவாவுக்கும் தனிப்பிரதேச உரிமையுடன் கூடிய விசேஷ சலுகை வழங்கப்படும். மக்கள் விரும்பினுலன்றி வேறு மாற்றங்கள் செய்யப்படமாட்டாது" என்றும் நேரு கூறினுர். "கோவாவின் இந்த எதிர்காலம் விரைவில் அமுலாகும் என நம்புகிறேன். கோவாவை விடுவிக்கச் சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வோம். போர்த்துக்கல் அரசாங்கம் சமாதானமானமுறையில் கோவாவை விட்டு வெளியேறவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். ஆனுல் அவர்கள் நடவடிக்கை இந்த நம்பிக்கையை நமக்கு ஏற்படுத்தவில்லை. வேறு நடவடிக்கைக்குத் தயாராகும் அதேசமயத்தில் சமாதானப் பேச்சுக்களுக்கும் இடம்செய்துள்ளோம். எவ்வாருயினும் அவர்கள் ஆதிக்கம் இனி நீடிக்க முடியாது" என்றும் இந்தியப் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்தார்.

பாரத எல்லையிலுள்ள இரு கிராமங்களில் போர்த்துக்கேய துருப்புக்கள் சுட்டதாயும், இந்திய ரிசர்வ் பொலிஸ் அங்கு தென்பட்டதும் சுடுவதை நிறுத்திவிட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. கோவாவில் ஓரிடத்தில் தேசீயவாதிகள் தந்திக் கம்பிகளைத்துண்டித்ததுடன், பாலங்களைத் தகர்த்துவிட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

# 3வருட வரவுசெலவுத்திட்டம்

## நிதிமந்திரி சமர்ப்பிப்பார்

கொழும்பு, வெள்ளி

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அடுத்தபடியாக உத்தேச வரவு செலவுத் திட்ட மசோதாவைச் சமர்ப்பிக்கும்போது இன்னும் மூன்று வருடங்களுக்கான நீண்டகால வரவு செலவுத் திட்டமொன்றைப் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பார். இதுகாரணமாக அமைச்சர்கள் அனைவரிடமிருந்தும் மூன்று வருடங்களுக்குமான மாதிரித் திட்டங்களைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு நிதிமந்திரி கேட்டுள்ளார். இந்த மாதிரித் திட்டங்களில் அமைச்சுக்களின் அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொரு மாதத்துக்கும் மாறுபட்டுச் செல்லும் விவரங்கள் அனைத்தும் தரப்படவேண்டும் என நிதிமந்திரி கேட்டுள்ளார். செலவுகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்று தொடர்பாக வரக்கூடிய அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கும் வரையப்பட வேண்டும் என மந்திரி கேட்டுள்ளார். மந்திரிகள் அனைவரும் தத்தம் நிரந்தரக் காரியதரிசிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே அறிக்கைத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நிதிமந்திரியினுல் அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

## சுதந்திரத்துக்கு ஆபத்து

### எம். பி. கருத்து

தெகியோவிட்ட, வெள்ளி

"பிரிட்டிஷாரிடமிருந்து யு. என். பி. இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது. ஆனுல் இப்பொழுது குறிப்பிட்ட ஒரு கட்சி இலங்கையை ரஷ்யாவிடம் ஒப்படைக்க எத்தனித்துவருகிறது. இதனுல் சுதந்திரம் ஆபத்தான நிலையிலிருக்கிறது."

இவ்வாறு ருனுவலை எம். பி. திரு. பி. ஸி. இம்புலான அலுத்கமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:—

1956ம் ஆண்டு யு. என். பி. யை மக்கள் ஒதுக்கிவிட முடிந்தது. அப்பொழுது ஜனநாயகம் இலங்கையில் நிலவிவந்தாலேயே இது சாத்தியமாக இருந்தது. இப்பொழுது ஜனநாயகம் ஆபத்தான நிலையிலிருக்கின்றது.

தமது எதிர்க் கட்சியினரைத் தாக்குவதற்காக அரசாங்க ரேடியோவை உபயோகப்படுத்துகிறது.



# மாணவர் மலர்



## வானவெளி வீரனுக்கு மாணவன் கடிதம்

**மேஜர் ககாரின் அவர்களே!**

தங்களுக்கு ஒரு கடிதமெழுத வேண்டுமென்பது எனது நீண்டநாள் ஆசை. இப்போது தான் தருணம் கிடைத்தது. வானவெளிப் பிரயாணத்தை முடித்த தங்களுக்கு இதனைப் படிக்க அவகாசம் இருக்குமோ என்ற அச்சத்தால் நான் எழுதாமல் விடவில்லை. நான் அனுப்பும் கடிதம் தங்கள் கைக்குக் கிட்டுமா? இலங்கையில் தணிக்கை இருக்காதா? தணிக்கை முடிவுற்றாலும் எங்கள் தபாற் சேவையின் அழகைத் தங்களுக்கும் காட்டவேண்டுமா? கண்டங்கள் அனைத்தையும் கடந்து தங்கள் நாட்டுக்குள் இது பிரவேசிக்க முடியுமா? இரும்புத்திரை நாடென்று ஏதே சொல்கிறார்களே! அதனால்தான் இக்கேள்வி இது பலருக்கு விளங்குவதில்லை. விட்டுவிடுவோம்.

யாழ்ப்பாணத்துக்கு தாங்கள் விஜயஞ் செய்யும்போதாவது பாராட்டுதலோடுகூடிய ஒரு கடிதத்தை வெளிப்படுத்துக்காகவேனும் எழுதாது விட்டேனானால் மற்றவர்கள் உள்ளூர என்ன எண்ணுவார்கள்? சிரமத்திற்கிடையே இதனையும் சிறிது படியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறும் வரவேற்பில் மாணவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பது பெருமைதானே! அரசாங்க விருந்தினராகிய தங்களுடன் கல்வியமைச்சர் வருகிறார். மாணவர்களை முன்வைத்து நடாத்தப்படும் இந்த வைபவத்தில் நாம் பாதிக்கப்படாமல் இருந்தால் அதுவே போதுமானது.

அறிஞர்களிடம் உலகம் இருப்பதாக பல ஆண்டுகள் எண்ணியிருந்தேன். பெரும்பான்மையான அறிவாளிகளுக்குத் தம்மைக் காத்துக்கொள்ளவும் தெரியவில்லை. மற்றவர்களைக்காக்கவும் தெரியவில்லை. முதலில் மற்றவர்களைக் காட்டிக்கொடுத்துப் பிழைக்க முயல்கிறார்கள். பிறகு அந்தத் துன்பவலையில் தாமும் அகப்பட்டு வருந்துகிறார்கள்.

இன்று உலகம் முழுவதையும் வானளாவக் கௌவிக் கொண்டிருக்கும் விஞ்ஞான முன்னேற்றம் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். ஆனால் இன்று மனிதன் முயற்சியால் விஞ்ஞானத் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் கண்டுபிடிக்கப்படும் சாதனைகளிலிருந்து சமுதாயம் அழிந்துபடாமலிருக்க புதிய வழிவகைகளையும் கோட்பாடுகளையும் கையாளவேண்டியிருக்கிறது.

வானவெளியாராச்சியில் வானவெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் தங்கள் பிரயாணம் மகத்தான சாதனையே. இந்த ஆராய்ச்சி முழு வெற்றியளித்து மனிதன் அங்கெல்லாம் சென்று வாழமுடியுமானால் வெவ்வேறு நாடுகளுக்கிடையே சண்டை போடும் மனிதர்கள் இதுவெல்லாம் போதாதென்று இரு வேறு உலகங்களுக்கிடையேயும் சண்டைபோட முனைவார்களோ என்னவோ? அங்கிலை வருமானால் தங்கள் நாட்டில் இன்று ஸ்டாலினுக்கு நடைபெறுவதே தங்களுக்கும் கிடைக்கும் என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும்.

நடுநிலைமை நாடாகிய இந்தியாவின் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் தங்கள் தோழமை நாடான சீனவைப்பற்றித் தங்கள் கருத்து என்னவோ?

எந்த நாட்டிலும் நிலம் ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. சொந்த நாட்டிலும் ஒருவருக்கொருவர் வேலி போடுவதில் சச்சரவு, பல்வேறு நாடுகளுக்கிடையேயும் நிலப்பரப்பைக் கட்டியாள்வதில் சச்சரவு. இந்தச் சச்சரவு இந்த உலகுடன் முடியாது வானவெளிக்கும் போகாமல் காத்துக்கொள்ளவேண்டாமா?

உலகத்திற்கு அப்பாலுள்ள கிரகங்களில் இடம் கிடைக்குமானால் பெருகிவரும் ஜனத்தொகையில் ஒரு பகுதியை அங்கும் அனுப்பிவைத்து நிலப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதோடு வாழ்க்கை முறைகளையும் சீர்ப்படுத்த வழிவகையும் ஏற்படலாம். ஆனால் அப்படி அங்கு அனுப்பக்கூடியவர்கள் எல்லோரையும் ஒருசேர அனுப்பியாகவேண்டும். ஏனெனில் முதற் குடியேறியவர், பின்வருபவரை நாடற்றவர் என்று அல்ல, உலகற்ற பிரஜையென்று சொல்லிவிடுவார். இங்குள்ள பிரஜாவுரிமைச் சட்டங்கள் அங்கும் தலைதூக்காது பார்த்துக்கொள்ள வேண்டும். நிற்க,

தங்கள் சாதனையைப் பொறுத்தவரை விஞ்ஞானத்துறையில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கிவிட்டது. இது ஏதோ உண்மைதான். ஆனால் புதிய பிரச்சினைகளின் சகாப்தமாக இது மாறிவிடாமல் பிரச்சினைகளைத் தீர்க்கும் சகாப்தமென்றாக வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

விஞ்ஞான முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட பலரைப் பற்றிப் படித்திருக்கிறேன். விஞ்ஞான புதிய சாதனைகளுக்காக தம்முயிரையெல்லாம் பலர் தியாகஞ் செய்திருக்கிறார்கள். தாங்களும் உயிரையே தியாகஞ்செய்யப் பின்னிற்கவில்லை. உலக நன்மைக்காக தமது உயிரைத் தியாகஞ் செய்யும் அந்த விஞ்ஞான பரம்பரையில் தாங்களும் சேர்ந்துவிட்டீர்கள். மாணவர்களாகிய எங்கள் இதயக் கோயிலிலும் முக்கிய இடம் பெற்றுவிட்டீர்கள்......

விஞ்ஞானிகள் பெற்றெடுத்த ஆக்க சக்திக் குழந்தைகள் இவ்வுலகில் சரியானமுறையில் வளர்க்கபபடல் வேண்டும். இதில் செவிலித்தாய் போன்ற அரசியல் தலைவர்கள் உதவி செய்யலாம். விஞ்ஞான உலகைக்கொண்டு தமது நாட்டு ஆட்சியைச் செலுத்த முயலக் கூடாதல்லவா?

விஞ்ஞானத்துறை வளர்ச்சியிலும், சமாதானத்திலும், உலக முன்னேற்றத்திலும் அக்கறையுடையவர்களே இவ்வுலகில் அதிகம். இதில் எஞ்சியிருப்பவர்கள் தொகை மிகக் குறைவே. இவர்கள்தான் உலகை ஆட்டி வைக்கிறார்கள். முன்னர் சொன்ன அந்த உலக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களை ஒன்று சேர்த்து "ஒரே உலகம்" சமைக்க வழிசெய்ய முயற்சியுங்கள். அப்போதுதான் போரிடும் உலகினை வேரொடு சாய்த்து உலக முன்னேற்றம் காண முடியும்; விஞ்ஞானிகளின் முயற்சியும் பயனுள்ளவையாக அமையும்.

நான் சொல்லும் காரணங்களும் வழிகளும் எள்ளிநகையாடக்கூடியதாக இருக்கலாம். நான் ஒரு பட்டதாரியல்ல. ஆராய்ச்சி மருத்துவன் அல்ல. உலக நாடக மேடையில் அன்றாடம் நடைபெறும் காட்சிகளைப் பார்த்துப் படிப்பினையாகக்கொள்ளும் ஒரு கிராமப்புறமாணவன். ஐரோப்பியனோ, அமெரிக்கனோ, ரஷ்யனோ, அரசியல் தலைவர்களோ இதைச் சொன்னால் காரணம் தெரியாவிட்டாலும் உலகம் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளும். நான் எலிக்கும், பூனைக்கும், நாய்க்கும் உணவு கொடுத்து அவற்றை அன்றாடம் எடைபோட்டுப் பார்த்து இதனைச் சொல்லவில்லை. இருந்தாலும் புதிய சகாப்தத்தை உருவாக்கிய தங்களிடம் என் உள்ளத்தில் பட்டதை மனித குலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லுதவற்கு எனக்கு உரிமையுண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் போது மற்றவர்கள் தந்த பொருள் அன்பளிப்புகளுடன் இதனையும் உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.
அன்புள்ள மாணவன்
இராசு.



இந்திய கைத்தொழிற் கண்காட்சியொன்றை உபஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் புதுடில்லியில் ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் பொருள்களை டாக்டர் ராதாகிருஷ்ணன் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## சிறையும் அபராதமும்

பருத்தித்துறை, வியாழன்

கத்தியால் வெட்டி காயம் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டி கரவெட்டியைச் சேர்ந்த மூவர் மீது பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி முதல் எதிரிக்கு 3 மாதச் சிறையும் 2-ம் 3-ம் எதிரிகட்கு தலா 100 ரூபாய் அபராதமும் செலுத்தும்படி தீர்ப்பு வழங்கினார்.

காயம் அடைந்த சின்னையா இளையதம்பி என்பவரும் எதிரிகளான தம்பையா, மயில்வாகனம், கணபதிப்பிள்ளை ஆகியோரும் உறவினர்களாம்.

1-ம் எதிரி தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துள்ளார்.

## அறிவுச் செல்வம்

★ உங்கள் வீட்டில் உள்ள கோழி, ஒரு நாளைக்கு எத்தனை முட்டையிடும் என்று கேட்டால், "என்ன...... இதுவும் ஒரு கேள்வியா?" என்று கேட்டவரையே திருப்பிக் கேட்பீர்கள். ஆனால் ஒரு கோழி ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்தல்ல, பத்தல்ல, பதின்மூன்று முட்டைகளை இட்டுள்ளதென்றால்நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்களா, என்ன? இந்த அதிசயம் நம் நாட்டில் நடைபெறவில்லை. வடக்கு ஜப்பானில்தான் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. ஒரே நாளில் 13 முட்டைகள் இட்ட இந்தக் கோழி, ஏனைய கோழிகளைவிட 50 சதவிகிதம் உணவு அதிகமாக உட்கொள்கின்றது. இதன் இரண்டு சூல் பைகளும் இயங்கிக் கொண்டிருக்கக்கூடும் என்று உடற்கூறு நிபுணர்கள் கருதுகின்றனர்.

★ நமது ஊரில் ஒரு நல்ல படம் வந்து விட்டால், அந்தப் படத்தின் பெயரைப் புடவைகளுக்கும் சூட்டிவிடுகின்றனர். ஆனால் விஞ்ஞானத் துறைகளிலும் பிற துறைகளிலும் முன்னுக்குச் சென்றுகொண்டிருக்கும் சோவியத் ரஷ்யாவிலுள்ள நிபுணர்கள் இப்போது "வானவெளியின் உணவு" என்று பெயரிடப்பட்ட ஒரு வகை உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். முன்பு வானவெளியில் மிதந்த ககாரினும், டிட்டாவும் கெட்டியான கஞ்சி போன்ற திரவ உணவை உட்கொண்டனர். பிளாஸ்டிக் 'டியூப்பை' அமிழுத்தினால் இவ்வுணவு வெளிவரும். ஆனால் இப்போது மெல்லக்கூடிய "கேக்" தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். ககாரினுக்கும் டிட்டாவுக்கும் கொட்டைப் பாக்கு அளவு சிறு ரொட்டித் துண்டுகள் தனியாக சுட்டுக்கொடுக்கப்பட்டன என்றால் பாருங்களேன்.

## கொழும்பில் ஜலதோஷம் அதிகம் பரவுகின்றது

கொழும்பு, வெள்ளி

கொழும்பு நகரத்தில் ஜலதோஷம் அதிகம் பரவி வருவதாகச் சுகாதாரப்பகுதித் தலைமை வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா கூறியுள்ளார். நகரசபை வைத்திய சாலைகளிலிருந்து அறிந்ததன் பேரில் பெருந்தொகையானவர்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது என டாக்டர் நடராஜா கூறியுள்ளார். இக்காய்ச்சல் கண்டும் நோயாளிகள் அனைவரும் சிகிச்சையின் பின்னர் குணமடைந்துவிடுகிறார்களென்றும் காய்ச்சலினால் ஒருவரும் மரணமாகவில்லை என்றும் வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.

தலைவலி, வாந்தி, இருமல், கடுமையான ஜலதோஷம், உடம்பு உளைச்சல் ஆகியவையே இந்தக் காய்ச்சல் கண்டுள்ளதற்கு அறிகுறிகள் இக்காய்ச்சல் கொண்டுவரும் கிருமிகள் பற்றி ஆராய்ச்சி நடாத்துவதற்கு ஆராய்ச்சுக் கூடம் எதுவும் இலங்கையில் இல்லையென்றும், இதனாலேயே இக்கிருமிகள் பற்றி இங்கு ஆராய்ச்சி நடாத்தப்படவில்லை என்றும் டாக்டர் நடராஜா கூறியுள்ளார்.

## மாதங்கள்

— சாமி பழ —

சித்திரை, வைகாசி, ஆனி-மிகத்
தேர்ந்த வஞ்சகி கூனி

ஆடி, ஆவணி, புரட்டாசி-இங்கே
அனைத்தும் உள்ளவர் சுகவாசி

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி-தமிழ்
ஒளவை சொன்னது நேர்வழி

தை, மாசி, பங்குனி-நம்
தம்பி பிறந்ததும் பங்குனி.

வெளிவந்துவிட்டது!

**1962-ம் ஆண்டு மாணவர் தினக்குறிப்பு**

மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாக
பல விசேஷ அம்சங்களுடன்
வெளியிட்டிருக்கிறோம்.

விலை சதம் 75 மாத்திரம்

ஈழநாடு லிமிட்டெட்
சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.

# சாராயமும் காரும் கைப்பற்றப்பட்டன

## உரும்பராயில் ஐவர் கைது

மாவிட்டபுரம், வெள்ளி

" சுன்னுகம் பொலிசாருக்குக் கிடைத்த ஒரு தகவலின் மீது சார்ஜண்ட் வி. வீரபாகு தலைமையில் சென்ற ஒரு பொலிஸ் கோஷ்டி உரும்பிராயில் வடிசாராயம் காரில் ஏற்றிக் கொண்டிருந்த கோஷ்டியையும் சாராயத்தையும், காரையும் கைப்பற்றியுள்ளது.

சுன்னுகம் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்ற போது உரும்பிராயைச் சேர்ந்த ராமுப்பிள்ளை முத்துலிங்கம், ராமுப்பிள்ளை தியாகலிங்கம், ராமுப்பிள்ளை நடேசலிங்கம், ராமுப்பிள்ளை சுப்பிரமணியம் புலோலியைச் சேர்ந்த சபாரத்தினம் சிவாநந்தன் ஆகியோர் ஒரு காரில் மூன்று சாக்குகளில் நாற்பத்தொன்றரைப் போத்தல் வடிசாரயத்தை கொக்குவிலுக்குக் கொண்டுபோக ஏற்றிக்கொண்டிருந்ததாகவும் சுன்னுகப் பொலிசார் இவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கைது செய்யப்பட்ட ஐவரும் பொலிஸ் பாதுகாப்பில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளார்கள்.

காரும், கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சாராயமும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## "சைவப் பாடசாலைக்கு உதவிய கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்"

முள்ளியவளை, வெள்ளி

"இப்பாடசாலைக் கட்டடத்தைக் கட்டுவதற்கு 5,600 ரூபா செலவு செய்துள்ளோம். இத்தொகையில் அரைவாசியை, எமது முன்னுள் முகாமையாளராகிய சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினர் தந்துதவியுள்ளனர். மிகுதித் தொகை பெற்ருர், ஆசிரியர், அனுதாபிகளால் கொடுக்கப்பட்டது, பணம் கொடுத்து உதவியவர்களுள் முல்லைத்தீவுக் கடற்தொழில் முதலாளிமார்களாகிய கத்தோலிக்க கிறிஸதவர்கள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்கள்."

தண்ணீரூற்றுச் சைவப் பாடசாலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டம், வவனியா வித்தியாதிகாரி திருமத் ஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், தலைமையாசிரியர் திரு. ச. முத்தையா மேற்கண்டவாறு பாராட்டினுர். மேலும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"மாணவர் கல்வியில் அக்கறையுடையவர்கள். பெற்ருரும், ஆசிரியரும் பாடசாலையின் நல்விருத்தியையே குறிக்கோளாகக் கொண்டு உழைக்கிருர்கள். ஆதலினுல், இங்கு சேவை செய்வது உற்சாகமாக இருக்கிறது."

## 'சமசமாஜிகளால்தன்ா முடியும்'

உடுப்பிட்டி, வெள்ளி

"சிறுபான்மையினரின் குறைகளை சிங்கள-தமிழ் உழைப்பாளிகளின் பொது விசுவாசத்தைப் பெற்ற தேசியக் கட்சியான சமசமாஜக் கட்சியினுல் மட்டுமே முடியும்"

இவ்வாறுவதிரியில் நடைபெற்றசமசமாஜவாலிபர்சங்கக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. ஆனந்த சங்கரி கூறினர். திரு. எஸ. கதிர்காமலிங்கம் தலைமை தாங்கினுர். டாக்டர் எஸ. மாசிலாமணி நன்றி தெரிவித்தார்.

## இலங்கை வரும் இரு இயந்திரங்கள்

கொழும்பு, புதன்

600,000 ரூபாய் செலவில் சாராய உற்பத்தி வேலைக்குத் தேவைப்படும் இரண்டு பிரதான இயந்திரங்களை கலால் பகுதி ஜெனிவாவிலிருந்து பெற்றுக்கொள்ள விருக்கிறது. கண்டி, களுத்துறை ஆகிய இரு இடங்களிலும் இந்த இரண்டு இயந்திரங்களும் இணைக்கப்படும். டிசம்பர் 1-ம் திகதி ஜெனிவாவிலிருந்து இங்கு வரும் இந்த இயந்திரங்கள் சாராயத்தைப் போத்தலில் சேர்த்து அடைத்து அடையாளம் பொறிக்கும் வேலைகளையும் போத்தல்களைக் கழுவும் வேலைகளையும் செய்யும் எனத் தெரிகிறது.

# ஆசிரியர் சம்பளம் நிறுத்தப்படும் காரணம்

## உதவி வித்தியாதிபதி விளக்கம்

உடுப்பிட்டி, வெள்ளி

பாடசாலைகளில் சராசரி விழ்ச்சி காரணமாக ஆசிரியர் சம்பள நிறுத்தம்பற்றி உதவி வித்தியாதிபதி திரு. எஸ. யூ. சோமசேகரம் விடுத்துள்ள சுற்றறிக்கை கூறுவதாவது:-

"இவ்விஷயம்பற்றி ஆசிரியர் சங்கங்களுடன் கலந்தாலோசித்தபின் சராசரி விழ்ச்சி காரணமாக ஓர் தீர்மானத்துக்கு வந்துள்ளோம். ஒரு பாடசாலையிற் சராசரி வீழ்ச்சியேற்பட்டால் மிகவும் குறைந்த சேவையுடைய ஆசிரியரே பாதிக்கப்படுவார். அவருக்கு பாடசாலை நிதியிலிருந்து 3 மாத காலத்துக்குச் சம்பளம் கொடுக்கப்படும். அக்கால எல்லைக்குள் அவர் வேறெங்காவது இடமாற்றம் செய்யப்பட்டு அவரது சேவையைப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரதேசத்தில் அவரது சேவையை பயன்படுத்தமுடியாவிடின் அவர் வெளியிடங்களுக்கு மாற்றப்படுவார்."

## காயம்விளைவித்தனராம் எதிரிகளுக்கு 3 மாதச் சிறை

மாவிட்டபுரம், வெள்ளி

சுன்னுகத்தைச் சேர்ந்த நாகமணி முத்துக்குமாரு, செல்லப்பா பூபாலசிங்கம் ஆகிய இருவரும் அதே யூரைச் சேர்ந்த கணபதி செல்லப்பா என்பவரை கத்தியால் வெட்டியும் பொல்லால் தாக்கியும் படுகாயம் விளைவித்ததாக சுன்னுகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி இரு எதிரிகளையும் குற்றவாளிகள் எனக் கண்டு இருவருக்கும் தலா மூன்று மாதக் கடுழியச் சிறைததண்டனை விதித்தார்.

இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதாயிருந்தால் இரு எதிரிகளையும் தலா ரூபா 2500 பிணையில் செல்லும்படி கட்டளையிட்டார்.

எதிரிகள் தரப்பில், திரு ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை ஆஜரானுர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 9-12-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 எஸ். செல்லத்துரை -வயலின்.

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 ஆர். என். சண்முகலிங்கம், ஆர். என். கனகலிங்கம். பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 அறிவுச் சுழல், 9-45 லயவின்யாசம், 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 10-12-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 8-00 தேர்ந்தஇசை, 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கிறிஸ்தவநிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 குரல் வகை, 6-30 ஈ. சுப்பையா - கிளாரினட்.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 அம்பிகா தாமோதரம், ஞானு சிவசுப்பிரமணியம் - பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

**சனி 9-12-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 தஞ்சாவூர் எஸ். கோதண்டராமன் - வயலின்.

பகல் 12-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 தஞ்சாவூர் எஸ். கோதண்டராமன் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு7-30 'காட்டுப்பறவை'- நாடகம், 8-00 திரைப்படஇசை, 9-30 டெல்லிஅஞ்சல், 11-00 இடைவேளை இசை. 11-15 டெல்லிஅஞ்சல்.

**ஞாயிறு 10-12-61**

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 எஸ். ஏ. வசந்தா - பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியககந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கே. கே. ஜோஸ்-தில்ருபா.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பாபநாசம் ஏ. பாலசரஸ்வதி - வயலின், 8 30 டெல்லிஅஞ்சல், 8-45 எஸ். ஏ. வசந்தா - பாட்டு, 9-15 வாத்தியஇசை, 9-30 எஸ். ஏ. வசந்தா - பாட்டு, 9-45 ஒலிப்பதிவுகள்.

## வடிசாராயம் வைத்திருந்தாராம்

### ரூ. 175 அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மூன்று போத்தல் வடிசாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவருக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் ரூ. 175 அபராதம் விதித்தார்.

கே. சுப்பன் என்பவர் 3 போத்தல் வடிசாராயம் வைத்திருக்கும்போது சங்கானைப் பொலிசைச்சேர்ந்த சப் இன்ஸபெக்டர் திரு. கே. குமார் கைது செய்திருந்தார். சார்ஜண்ட் முருகேசு வழக்கை நடத்தினுர்.


இது உயர்ந்த நாகரீகம்!

இது இந்திய கைத்தறி!



சிறந்த நிறங்களில், உயர்ந்த நாகரீகத்தில், பெண்மையின் எழிலோங்க இந்திய கைத்தறித் துணிகளைத் தேர்ந்தெடுங்கள்.

பருத்தி நூலால் தயாரிக்கப்பட்ட புடவைகள் மற்றும் மேலாடைகளும் பலவிதமான மாயாஜால நிறங்களில் கிடைக்கின்றன.

தேவர்களுக்கும் உகந்த கைத்தறித் துணிகள் இந்தியாவைப்போன்ற.. புராதனப் பெருமையுடையவை.

ஹாண்ட்லூம்ஸ்

கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா.

தி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பேப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோஆப்பரேடிவ் சொசைட்டி லிட். ஜன்மபூமி சேம்பர்ஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்-1. இந்தியா.

கொழும்பு-7, வீ ஸ்டிரீட்.
ஜாப்னு-47, கிரவுண்ட்ப்ளோர், மெயின் ஸ்டிரீட், (சிலோன்)
கண்டி-69, கொழும்புத் தெரு.
ஏடன்-போரா பஜார், க்ரேடர்.
சிங்கப்பூர்-23, ரேஸ்கோர்ஸ் லேன்.
கோலாலம்பூர்-67, ஆம்பாங் ரோடு.



# மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

## ஏ. எம். புகாரி அன் கோ.

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# இந்திய பிரயாணத் தடை நீக்கினல் தோட்ட நெருக்கடி குறையும்

## முதலாளிமார் சங்கம் அரசாங்கத்துக்கு சிபார்சு

கொழும்பு, வியாழன்

1961-ம் ஆண்டில் எங்கள் தோட்டங்களில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு அமைதி நிலவியது. தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளருக்குமிடையில் பொதுவாக நல்லுறவு நிலவியது. இதற்கு அவசரகால நிலைமைதான் காரணமென்று நாங்கள் கருதவில்லை. என்ருவது ஒரு நாள் முடிவடைய வேண்டிய அவசரகால நிலைமையை எந்த முதலாளியும் முட்டாள்தனமாக தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வாரென்று நாங்கள் நினைக்கவில்லை.

இவ்வாறு இலங்கை விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தொழிலாளர்கள் போக்குவரவு செய்யத் தற்பொழுதிருக்கும் கட்டுப்பாட்டை தற்காலிகமாக நீங்கினல். தோட்டங்களில் நெருக்கடி குறையுமென்று அரசாங்கத்துக்கு சங்கம் சிபார்சு செய்துள்ளது.

தோட்டங்களில் அமைதியும் நல்லுணர்வும் நிலவுவதற்கு நான்கு காரணங்களிருப்பதாக் குறிப்பிடும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள நான்கு காரணங்களும் வருமாறு:-

பலாத்காரம், அமைதியின்மை, கட்டுப்பாடின்மை, வேலை நிறுத்தங்கள் ஆகியவைகள் நிறைந்த வருடத்துக்குப் பின்னர், முதலாளியும் தொழிலாளியும் அமைதியும் ஓய்வும் பெற விரும்பியதால் சிந்திக்கத் தொடங்கினர். இதன் பயன்தான் இன்று தோட்டங்களில் அமைதி நிலவுவதற்குரிய முதல் காரணம்.

தகராறுகள் வளர்ந்து வந்ததற்குக் காரணமான சிலபெரிய பிரச்சினைகள் தற்சமயத்துக்கு தொழிற் கோர்டுகளால் முடிவு செய்யப்படுவது இரண்டாவது காரணம்.

தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யம்படுவது சம்பந்தமாகவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவது சம்பந்தமாகவும் தோன்றும் தகராறுகளைத் தீர்ப்பதற்காக தொழில் தகராறு மத்தியஸ்த மன்றங்கள் நியமிக்கப்பட்டது மூன்ருவது காரணம்;

கட்டுப்பாடான பெரிய யூனியன்களிடம் ஏற்பட்டு வரும் உருப்படியான மாறுதல்களும் பொறுப்பும், இந்த மாறுதல்களை முதலாளிமார் உணர்ந்து கொள்ள ஆரம்பித்ததும் நான்காவது காரணமாகும்.

"போராட வேண்டுமென்பதற்காகவும் மதிப்புக்காகவும் போராட்டம் நடத்துவதை யூனியன்கள் கைவிட்டுவிட்டனவென்று" அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யூனியன்கள் கேட்டவைகளெல்லாவற்றையும் சங்கம் கொடுக்க முடியவில்லை. சங்கம் கொடுத்த சிலவற்றுடன் யூனியன்கள் திருப்தியடையவுமில்லை" என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

தொழிலாளர் கல்வி, தொழிலாளர்களின் குழந்தைகளிலிருந்து ஆரம்பமாக வேண்டும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

### ஜனத்தொகை அதிகரிப்பு

தோட்டப்பகுதியில் ஜனத்தொகைப் பெருக்கம் தான் சகல பிரச்னைகளுக்கும் அடிப்படைக்காரணம். இப்பிரச்னை உயர்தரரீதியில் தீர்வு காணப்படவேண்டும் என்று கூறும் அந்த அறிக்கையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தொழில்ாளர்கள் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்வதற்குள்ள கட்டுப்பாடுகளை தற்காலிகமாக நீக்கவேண்டுமென்றும் இதனல் தோட்டங்களில் நெருக்கடி குறையுமென்றும் அரசாங்கத்துக்கு சங்கம் சிபார்சு செய்துள்ளது.

## மருமகளை சுட்டவருக்கு மரணதண்டனை

நீர்கொழும்பு, வியாழன்

கம்பஹாவைச் சேர்ந்த மொறகொடை என்னுமிடத்தில் வசிப்பவரான ஏ. கே. பீட்டர் என்பவர், அவரது மருமகளான கே. ஏ. குசுமாவதி (19 வயது) என்பவரை துப்பாக்கியினல் சுட்டுக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில், குற்றவாளியாகக் கண்ட பீட்டருக்கு அசைஸ் கமிஷனர் திரு. பி. ஸ்ரீஸ்காந்தா மரணதண்டனை விதித்தார்.

மரணதன்டனை விதித்துத் தீர்ப்பளித்த அசைஸ் கமிஷனர் பீட்டரைப் பார்த்து, "ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?" என்று கேட்டபொழுது, பீட்டர் 'இல்லை' என்று பதிலளித்தார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த **எங்கள் செல்வி**

•

யாழ்ப்பாணம் மனோகரா **வீரவிஜயா** (சிங்களப் படம்)

•

சாவகச்சேரி **தேவேந்திரா** ஜெமினி கணேசன் நடித்த **களத்தூர் கண்ணமமா**


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

**சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை)

**நவா** (கொம்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி)

**நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா**

நடித்த




**மனோஹரா** (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

**வீரவிஜயா**

(சிங்களப் படம்)


## நேரு-பிரண்டிஸி கூட்டறிக்கை

புதுடில்லி, டிச. 8

அணு ஆயுத சோதனைகளைத் தடை செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் வரை அணு ஆயுத சோதனைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் நிறுத்திவைக்க வேண்டுமென ஆர்ஜன்டின அதிபர் பிரான்டீஸியும் பாரதப் பிரதமர் நேருவும் ஒரு கூட்டறிக்கையில் கேட்டுள்ளனர்.

ஆர்ஜன்டீன அதிபரும் பாரதப் பிரதமரும் நடத்திய பேச்சுவாரத்தைகளின் முடிவில் வெளியிடப்பட்ட இக் கூட்டறிக்கையில் இரு நாடுகளின் வர்த்தகத் தொடர்பை விஸ்தரிப்பது பற்றி இருவரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

முழுபடை குறைப்புக்கு வல்லரசுகள் சார்த்தியமான சகல முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்றும் கூட்டறிக்கை கேட்டுக் கொள்கிறது.

## நேருவுக்கு ஆர்ஜன்டீன அழைப்பு

புதுடில்லி, டிச. 8

ஆர்ஜன்டீனவுக்கு விஜயம் செய்யுமாறு பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவை ஆர்ஜன்டீன அதிபர் பிரண்டிஸி அழைத்துள்ளார். இந்த அழைப்பை ஸ்ரீ நேரு ஏற்றுக்கொண்டார்.

## திருடிய உண்டியலை கொடுக்குமாறு உத்தரவு

### தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, வெள்ளி

களனி ராஜ மகாவிகாரையிலுள்ள உண்டியல் பெட்டியிலிருந்து ரூபாய் 9.87 சதம் திருடியதாக பகா நெல்லே குணனந்ததேரோ என்னும் பௌத்த பிக்குமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின்பேரில் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு மாஜிஸ்டிரேட் திரு. நீல் டிசாநாயக்கா முன்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. டிசம்பர் 13ம் திகதியன்று தீர்ப்பு வழங்குவதாக மாஜிஸ்டிரேட் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். உண்டியல் பெட்டியையும் காசையும் களனி கோவிலுக்குத் திருப்பிக் கொடுக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

---

அநுராதபுரம், வெள்ளி

அநுராதபுரத்தில் புதிய நகரத்திலுள்ள ஒரு வீட்டுக்கு அருகே இனம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் மிகவும் ப்ழுதடைந்த நிலைமையில் கிடக்கக் காணப்பட்டது.

# ஷோம்பே கடாங்கா திரும்பினர்

## சண்டை நீடிக்கிறது

வியப்போல்ட்வில்லி டிச 8

கடாங்காவில் ஐ. நா. படைகளுக்கும் கடாங்கா படைகளுக்குமிடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜாடோட்வில்லி விமானநிலையத்தின் கட்டுப்பாட்டு நிலையத்தை இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானம் நாசமாக்கிவிட்டது.

பாரிஸ் சென்றிருந்த ஷோம்பே, ரொடிஷிய சம்மேளனப் பிரதமர் சேர். ரோய் பவன்ஸ்கியின் வேண்டுகோளுக்கிணங்க அவசர அவசரமாக கடாங்காவுக்குத் திரும்பிவிட்டாரெனக் கூறப்படுகிறது.

கடாங்காத் துருப்புக்களால் கடத்திச் செல்லப்பட்ட இந்திய மேஜர் அஜித்சிங் இன்னமும் எலிஸபெத்வில்லிக் அருகில் ஒரு இடதில் காவலில் வைக்கப் பட்டுள்ளார்.

கடாங்கா படையைச் சேர்ந்த கடாங்காவினர் பலர் படையிலிருந்து விலகி ஓட்டம் பிடிப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

கடாங்காவில் ஐ. நா. துருப்புக்களின் செயல்பற்றி ஐ. நா. படைத் தளபதி பிரிகேடியர் ராஜா திருப்தி தெரிவித்தார்.

## "கேலித் திட்டம்"

அம்பலாங்கொடை, வியாழன்

"தேசிய கல்வித்திட்ட மொன்றைப்பற்றிப் பேசும் அரசாங்கம், ஒரு கேலிக் கல்வித்திட்டத்தைத்தான் உருவாக்கியுள்ளது." என்று அம்பலாங்கொடையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் டாக்டர் எம். ஏச். சத்தசேன பேசுகையில் கூறினர்.

## ஆசிரியைக்கு பாராட்டு

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி மெதடிஸ்த மிஷன் கனிஷ்ட பாடசாலையின் உதவி ஆசிரியை திருமதி அ. ஆழ்வாப்பிள்ளை ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறுவதையொட்டி பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுவிழாவொன்றை நடத்தினர்.

தலைமை ஆசிரியர் திரு. ஜே. மு. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

## நெல்லியடியில் விற்பனவு இலாகா

உடுப்பிட்டி, வெள்ளி

அடுத்த வருடம் தைமாதம் முதல் திகதியிலிருந்து நெல்லியடிப்பகுதியில் விற்பனவு இலாகா கிளை ஒன்று ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## 8மைல் நீள வெட்டுக்கிளிக் கூட்டம்

புதுடில்லி, டிச. 8

இன்று 8 மைல்நீளமும், அரை மைல் அகலமுமுள்ள ஒரு வெட்டுக்கிளிக் கூட்டம் புதுடில்லியைக் கடந்து சென்றதாக அறிவிக்கப்பட்டது.

## நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

புதுடில்லி, டிச. 8

ஒரிஸா அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று தோல்வியடைந்தது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.